Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 29 (20.04.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:202

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்

மூலம்

வங்கிக் கணக்கு தேவையில்லை.

தரகு (Commission) ஏதுமில்லை.

எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk

சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

(சி/2228)

# தமிழ்மக்களினுடைய உரிமைப் பிரச்சினைகளை யுத்தத்தால் அடக்கிவிட முடியாதென்பதை தேசியத் தலைவர் நிறுவிக் காட்டியுள்ளார்

## அரசியற்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

**யுத்தத்தின் மூலமாக தமிழ் மக்களின் பிரச்சினையை அடக்கிவிடலாம் என, கருதியிருந்த இலங்கை அரசாங்கத்தின் கருத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து -**

**தமிழ் மக்களோடும் தமிழீழ தேசத்தோடும் பேச்சு நடத்தி ஒரு இணக்கப்பாடான தீர்வுக்கு வருவதைத் தவிர வேறு வழிமுறையின் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதை தமிழீழ தேசியத் தலைவர் நிறுவிக் காட்டியுள்ளார்-**

**என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

பொருண்மிய மதியுரைஞர் கலந்துரையாடலில் நேற்று சிறப்புரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில் -


கடந்த இரண்டரை வருடங்களாக தமிழர் தாயகத்தில் ஒரு யுத்த நிறுத்தம் ஏற்பட்டு அமைதி நிலவிக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் எமது மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றவாறு எமது மக்களுடைய வாழ்வியலில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை.

இந்த அரசியல் இராஜதந்திர நகர்வுகளில் நாங்கள் சாதித்தது என்பதானால் எமது விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக சர்வதேச அளவிலே எங்களுடைய விடுதலைப் போராட்ட நியாயத் தன்மைகளை எடுத்துச் சொல்வதும், அங்கீகாரங்களைப் பெறும் முயற்சிகளிலும் கணிசமான முன்னேற்றங்களை கண்டிருக்கிறோம்.

யுத்தத்ததால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க நாசகாரி போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகம் வந்தது!



(கொழும்பு)

அமெரிக்க கடற்படையின் ஏவுகணை தாங்கி நாசகாரி போர்க் கப்பலான யு.எஸ்.எஸ்.குஷிங் (டிடி 985) நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

துறைமுகங்களுக்கான சுற்றுப் பயணத்தின் ஒரு கட்டமாகவே இந்த நாசகாரி போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகத்தை நேற்று வந்தடைந்ததாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

அமெரிக்கக் கடற்படையின் நாசகாரி அணியைச் சேர்ந்த இந்தப் போர்க்கப்பலில் சுமார் 400 கடற்படையினர் பணியாற்றுகின்றனர்.

1979 இல் கடற்படையில் இணைக்கப்பட்ட இந்தக் கப்பலுக்கு அமெரிக்க சிவில் யுத்தத்தின்போது கடற்படையின் பிரபல தளபதியாகத் திகழ்ந்த கொமாண்டர் வில்லியம் பேக்கர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதியின் நினைவு நாள் தமிழர் தாயகமெங்கும் அனுஷ்டிப்பு!

அன்னை பூபதியின் 16 ஆம் ஆண்டு நினைவுதினம் யாழ்.நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சூ.சிறில் ஏற்றிவைக்க ஈகச்சுடரினை மாவீரர் மேஜர் நிரஞ்சனின் தந்தையாரான சு.க.தம்பிராஜா ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைக்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் சிறப்புரைகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அலரி மாளிகையின் பாதுகாப்பு இராணுவ கொமாண்டோக்களிடம்!

(கொழும்பு)

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகைக்கான பாதுகாப்பு வழங்கும் பொறுப்

### பிரதமரின் விருப்பத்திற்கேற்ப மாற்றம்

## தட்டிவான் தடம்புரண்டு ஒருவர் பலி; 9 பேர் காயம்!

# தட்டிவான் தடம்புரண்டு ஒருவர் பலி; 9 பேர் காயம்!

(கொடிகாமம்)

கொடிகாமம் பகுதியிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த தட்டிவான் ஒன்று தடம்புரண்டதில் ஒருவர் உயரிழந்தார். ஒன்பது பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 7 பேர் பெண்களாவர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி பயணிகளுடன் குறித்த தட்டிவான் நேற்றுக்காலை சென்றுகொண்டிருந்தது. அவ்வேளையிலேயே இந்த தட்டிவான் வரணியை அண்டிய குடவத்தைப் பகுதியில் தடம்புரண்டது.

(12. ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் விருப்பத்திற்கேற்ப மாற்றம்

(கொழும்பு)

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகைக்கான பாதுகாப்பு வழங்கும் பொறுப்பிலிருந்து விசேட அதிரடிப்படையினர் நீக்கப்பட்டு - இராணுவக் கொமாண்டோக்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அலரி மாளிகையின் பாதுகாப்புப் பொறுப்பை இராணுவக் கொமாண்டோக்கள் விரைவில் பொறுப்பேற்கவுள்ளனர்.

இது தொடர்பாக தகவல் வெளியிட்ட அதிகாரபூர்வ பாதுகாப்பு வட்டாரங்கள், விசேட அதிரடிப்படையினருக்குப் பதிலாக இராணுவக் கொமாண்டோக்கள் அலரி மாளிகையின் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்க விருப்பதாகத் தெரிவித்தன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையின் பாதுகாப்பை இராணுவத்தின் விசேட கொமாண்டோ படைப்பிரிவினரே மேற்கொள்ள வேண்டுமென்று விருப்பம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனது மெய்ப்பாதுகாவலர்களாக இராணுவக் கொமாண்டோக்களை வைத்திருக்கவே அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கும கொமாண்டோக்கள் பாதுகாப்பு வழங்கவிருக்கின்றனர். இவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளே ஏக பிரதிநிதிகள் என்ற யதார்த்தத்தை

# சிங்கள தேசமும் சர்வதேசமும் உணர்ந்துகொண்டு தமது அரசியல் நகர்வுகளினை மேற்கொள்ளடும்!

### விடுதலைப் புலிகள் ஏடு நம்பிக்கை

அரசியல், இராணுவ ரீதியில் ஈழத் தமிழரின் ஏக தலைமையாக புலிகள் இயக்கமே உள்ளது நிரூபிக்கப்பட்டு விட்டது. இந்த அரசியல், இராணுவ யதார்த்தத்தை சிங்கள தேசமும், சர்வதேசமும் இனி மேல் மனதில் நிறுத்திக்கொண்டு தமது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளும் என நம்பலாம் என்று-

விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின், ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் என்றும் மிளிர்ந்து கொண்டிருக்கப் போகும் ஒரு கலங்கரை விளக்காக 2004 ஆம் ஆண்டின் ஏப்ரல் இரண்டாம் நாள் திகழப் போகின்றது.

தாயகம்-தேசியம்-தன்னாட்சி என்ற தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்கு மக்கள் ஒன்றிணைந்து வழங்கிய அரசியல் ஆணையின் அதிகாரபூர்வ நாளாக அன்றைய தினம் அமைந்துள்ளது.

தமிழரின் அரசியல் பிரதிநிதிகள் புலிகள் தான் என்பதை மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாக்களித்து உலகிற்கு பறைசாற்றிய நாளும் அதுதான்.

தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் தமிழ்க் கூட்டமைப்பு பெற்றுள்ள அமோக வெற்றி புலிகளின் அரசியல் பலத்தையும் உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது. நாடாளுமன்றின் மூன்றாவது பெரிய அரசியல் கட்சியாக 22 ஆசனங்களுடன் தமிழ்க் கூட்டமைப்பு இடம்பெற்றுள்ளது.

கடந்த இரண்டு தசாப்த காலத்திற்கும் போரியல் வரலாற்றில் புலிகள் இயக்கம் தமது இராணுவ பலத்தை ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளது. இப்போது அரசியல் தளத்தில் புலிகளின் தலைமைத்துவமும் அதன் ஆற்றலும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் அரசியல் இராணுவ ரீதியில் ஈழத்தமிழரின் ஏக தலைமையாக புலிகள் இயக்கமே உள்ளது. நிரூபிக்கப்பட்டுவிட்ட இந்த அரசியல் இராணுவ யதார்த்தத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## - 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் -

# வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நேரடியாக மின்சாரம் விநியோகம்!

### பிராந்திய பிரதி பொது முகாமையாளர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன் வவுனியாவிலிருந்து நேரடி மின் விநியோகம் இடம்பெறச் செய்யத் திட்டமிடப்பட்டிருப்பதாக இலங்கை மின்சார சபையின் வட பிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் இ.முத்துரட்ணம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இந்த ஆண்டுக்குள் மின் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கிளிநொச்சி மாவட்டத்துக்கு யூன் மாதம் 30 ஆம் திகதிக்குள்ளும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னரும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்திற்கு நேரடி மின் இணைப்பை வவுனியாவுடன் ஏற்படுத்துவதற்காக முதலில் கிளிநொச்சியில் 132 கிலோ வாற்ஸ் கொள்ளளவு கொண்ட உப மின்னிலையம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இவ்வாறான பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு 2007 ஆம் ஆண்டு அளவிலேயே இந்த நேரடி மின் விநியோகம் சாத்தியப்படும் என நம்புகிறேன். இத் திட்டத்திற்கு சுமார் 1000 மில்லியன் ரூபா வரை செலவு செய்யப்படுமென நம்பப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

### 7 ஆவது 'செவ்வானம்' இதழ் வெளிவந்தது

'செவ்வானம்' காலாண்டு கல்வி, கலை, பண்பாட்டு இலவச இதழில் 7 ஆவது வெளியீடு வெளிவந்துள்ளது. புதிதாகக் குறுக்கெழுத்துப் போட்டியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதழ்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ள - இல 19, அடப்பன் வீதி, முதலாவது ஒழுங்கை, குருநகர் முகவரியில் அமைந்துள்ள சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. (206)

### நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில்

# 36 குடும்பங்களின் பட்டியல் நிதி தருவிக்க அனுப்பிவைப்பு

நெடுந்தீவு பிரதேசசெயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த 36 குடும்பங்களுக்கு, மீளக்குடியமர்வு கொடுப்பனவிற்கான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, கொடுப்பனவு நிதி விடுவிப்பதற்காக யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தியா, வன்னிப் பகுதியில் இருந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கே இந்தப்பட்டியலில் பெயர் இடம்பெற்றுள்ளதுடன், மேலும் 10 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு இன்னும் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, கொடுப்பனவு வழங்க வேண்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இந்த 36 குடும்பங்களுக்குமான கொடுப்பனவுகள் எப்போது கிடைக்கும் என்பது தொடர்பான விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. (113)

# பன்றித்தலைச்சி அம்மன் தீர்த்தக் கேணி படையினர் - மக்கள் இணைந்து துப்புரவு

மட்டுவில் வடக்கில் அமைந்துள்ள அருள்மிகு பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத் தீர்த்தக் கேணியும், சுற்றாடலும் நேற்றுமுன்தினம் படையினரால் துப்புரவு செய்யப்பட்டது. அண்மையில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வுகளின் பின்னர் குப்பை கூழங்கள் நிறைந்திருந்த ஆலய சுற்றாடல் இந்தச் சிரமதானத்தின் பின்னர் அழகுற விளங்குகின்றது.

அத்துடன், ஆலயத் தீர்த்தக் கேணியும் இறைக்கப்பட்டு கழிவுகள் அகற்றப்பட்டு சுத்தம்செய்யப்பட்டுள்ளது. படையினரால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு பொதுமக்களும் இணைந்து இந்தத் துப்புரவுப் பணி மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (24)

### களவாக மண் ஏற்றிய

# 14 உழவு இயந்திரங்கள் நீதிமன்றில் ஒப்படைப்பு!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோமாக மண் ஏற்றிய 14 உழவு இயந்திரங்கள் யாழ்.பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு யாழ். மாவட்ட நீதிமன்றில் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கொட்டடி, அரியாலை முதலான பகுதிகளில் மண் அகழ்வில் ஈடுபட்ட 14 உழவு இயந்திரங்கள் யாழ். பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தன.

இவற்றின் மீதான விசாரணைகளை மேற்கொண்ட மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா அவற்றில் ஒன்பதை நீதிமன்றிற்கும், ஏனைய ஐந்தையும் கானான் சிறுவர் இல்லத்திற்கு வழங்குமாறும் கட்டளையிட்டுள்ளார்.

இதேவேளை - அவர்களுக்குத் தண்டப்பணமும் அறவிடப்பட்டுள்ளதுடன், எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ப)

# நிகொட் அலுவலகத்தில் இருக்கை வசதியில்லை!

### பெண்கள், முதியோர் சிரமம்

நிகொட் அலுவலகத்திற்கு வரும் மக்கள் அமர்வதற்கு ஏற்ற இருக்கை ஒழுங்கு செய்யப்படாமையால், அங்கு செல்லும் மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

யாழ். செயலகத்தில் இயங்கி வரும் இந்த அலுவலகத்திற்கு நாள் தோறும் பல்வேறு தேவைகளையும் நிறைவு செய்யும் பொருட்டு மக்கள் சென்று வருகின்றனர். அவ்வாறு செல்லும் மக்கள் அமர்வதற்கு ஏற்ற வகையில் கதிரையோ, வாங்குகளோ போடப்படவில்லை. இதனால் மக்கள் கால்கடுக்க நிற்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

அங்கு தமது அலுவல்களை மேற்கொள்ளும் பொருட்டு, செல்லும் வயதானவர்கள், பெண்கள் போன்றோர் நடைபாதையில் அமர்ந்திருப்பதையும் - சிலர் கீழே படுத்துக் கிடப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

யாழ்.மாவட்டதில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்வதில் முக்கிய பங்காற்றி வரும் நிகொட் நிறுவனம் இவ்வாறு பொதுமக்களை சிரமப்படுத்துவதையிட்டு சமூக நலன்விரும்பிகள் பெருமகவலை தெரிவித்தனர். (ப)

# ஜீப் ஏற்றி மத்திய அமைச்சரை கொலை செய்வதற்கு முயற்சி!

(புதுடெல்கி)

ஜீப்பை ஏற்றி கொல்ல நடந்த முயற்சியில் மத்திய அமைச்சர் சையத் ஷாநவாஸ் உசேன் உயிர் தப்பினார்.

பீஹார் மாநிலம் கிஷன்கஞ்ச் என்ற இடத்தில் நாளைமறுதினம் பிரதமர் வாஜ்பாய் கலந்துகொள்ளும் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதற்காக அங்குள்ள ருயி ஜன்சா மைதானத்தில் மேடை அமைக்கப்பட்டு வருகிறது.

மேடை அமைக்கும் பணியை மத்திய புடவைக் கைத்தொழில் அமைச்சர் ஷாநவாஸ் உசேன் நேற்றுமுன்தினமிரவு பார்வையிட சென்றிருந்தார்.

மேடை அமைக்கும் பணியை ஷாநவாஸ் உசேன் பார்த்துக் கொண்டு இருந்தபோது அவர் மீது மோதுவதற்காக அவரை நோக்கி வேகமாக ஒரு ஜீப் வந்தது. இதைப் பார்த்ததும் ஷாநவாஸ் உசேன் உடனே விலகிக்கொண்டார். இதனால் அவர் உயிர் தப்பினார். பின்னர் அந்த ஜீப் அங்கிருந்து வேகமாகச் சென்றது.

உடனே அமைச்சரின் பாதுகாவலர்களும், பொலிஸாரும் அந்த ஜீப்பை விரட்டிச்சென்று அருகில் உள்ள ரயில்வே கடவை அருகே மடக்கினார்கள். அப்போது அதிலிருந்தவர்களில் ஒருவன் ஏ.கே - 47 ரக துப்பாக்கியுடன் தப்பியோடி விட்டான்.

2 பேர் பொலிஸாரிடம் பிடிபட்டனர். விசாரணையில் அவர்கள் பெயர் - கமல் கிஷோர் யாதவ், விமல்குமார் தாகூர் எனத் தெரியவந்தது. அவர்களிடம் விசாரணை நடந்துவருகிறது.

தன்னைக் கொல்ல நடந்த இந்த முயற்சியின் பின்னணியில் பீஹார் அமைச்சர் தஸ்லிமுதீன் இருப்பதாக ஷாநவாஸ் உசேன் குற்றம் சாட்டியுள்ளார்.

# தேர்தலுக்குப் பின்னர் 3 ஆவது அணி உருவாகும்!

### வி.பி.சிங் நம்பிக்கை தெரிவிப்பு

தேர்தலுக்குப் பிறகு 3 ஆவது அணி உருவாகும் என்று முன்னாள் பிரதமர் வி.பி.சிங் நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் பல்லியாவில் இருந்து டெல்கி செல்லும் வழியில் கான்பூர் வந்தார். அங்கு அவர் நிருபர்களுக்கு அ. த்த பேட்டியின்போது கூறியதாவது -

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி தோற்கடிக்கப்படல் வேண்டும். மதவாத சக்திகளை முறியடிக்க தேர்தலுக்குப் பிறகு 3 ஆவது அணி உருவாகும் என்று நம்புகிறேன்.

நாட்டில் ஒற்றுமை, மேன்மை, வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால், மத்தியில் மதச்சார்பற்ற அரசு அமைய வேண்டும். அதன் மூலம் விவசாயிகள், நெசவாளர்கள் ஆகியோரின் வாழ்க்கைத்தரம் உயரும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் நாட்டில் வறுமைதான் உயர்ந்துள்ளது. தொழில் வளர்ச்சி குறைந்துவிட்டது. விவசாயிகள், நெசவாளர்கள் நலன் புறக்கணிக்கப்பட்டது. ஏழைகள் மேலும் ஏழைகளாக்கப்பட்டார்கள். பொருளாதாரம் சில தொழிலதிபர்களின் கைகளுக்கு மாறியது. எனவே வாஜ்பாய் அரசு முழுமையாக தோல்வி கண்டுவிட்டது.

பாரதீய ஜனதா தங்கள் பிரசாரத்தில் 'இந்தியா ஒளிர்கிறது', 'திருப்திகர உணர்வு' என்றெல்லாம் கூறுகிறார்கள். அப்படி நாட்டில் எதுவும் நடந்துவிடவில்லை. இது வாக்காளர்களைத் திசை திருப்பும் செயலாகும்.

லக்னோவில் இலவச சேலை வழங்கும் நிகழ்ச்சியில் 22 பெண்கள் பலியாகி இருக்கிறார்கள். இது வருந்தத்தக்கது. மக்கள் திருப்தி அடைந்து விட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், அங்கே 50 ரூபாய் மதிப்பில்லாத சேலைகளை வாங்குவதற்காக பெண்கள் கூடுகிறார்கள் என்றால், அது அவர்களின் வறுமையைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

போபர்ஸ் பீரங்கி விவகாரம் முடிந்து போன விடயம். அதனை அரசியல் ஆதாயத்துக்காக மீண்டும் கிளப்புகிறார்கள் என்று வி.பி.சிங் கூறினார்.

# முன்னாள் எம்.எல்.ஏ பாலன் கொலை 16 பேருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

முன்னாள் அ.தி.மு.க எம்.எல்.ஏ யான எம்.கே.பாலன் கொலை வழக்கில் 16 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 2 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

சென்னை மந்தைவெளி பகுதியில் வசித்துவந்தவர் எம்.கே.பாலன். அ.தி.மு.க எம்.எல்.ஏயாக இருந்த இவர் பின்னர் தி.மு.கவில் சேர்ந்தார்.

இவர் கடந்த 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைப் பயிற்சிக்கு சென்றபோது காணாமற்போனார். இது தொடர்பாக பொலிஸில் புகார் கொடுத்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதையடுத்து, பாலனின் குடும்பத்தினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் பாலன் வழக்கை விசாரிக்குமாறு சி.பி.சி.ஐ.டி பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து பாலனைத் தேடும் பணியில் பொலிஸார் இறங்கினர். விசாரணையின்போது பாலன் எரித்துக் கொலை செய்யப்பட்ட விபரம் தெரியவந்தது. அவரது சப்பாத்து ஒன்று மட்டுமே சிக்கியது. எரிக்கப்பட்டு விட்டதால் அவரது உடல், உடமைகள் எதுவும் கிடைககவில்லை.

இது தொடர்பாக பூங்கா நகர் மாணிக்கம், செந்தில்குமார், சாமிக்கண்ணு, ஹரிகரன் உள்ளிட்ட 18 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் செந்தில்குமார், சாமிக்கண்ணு, ஹரிகரன் ஆகியோர் சென்னை அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த ஜெயக்குமார் என்பவரையும் கொலை செய்தது தெரியவந்தது.

18 பேர் மீது சென்னை முதலாவது விரைவு நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. நேற்று இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் கணேசன் உள்ளிட்ட 2 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

மற்ற 16 பேருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதில் செந்தில்குமார், சாமிக்கண்ணு, ஹரிகரன் ஆகியோருக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

பணம் கொடுக்கல் வாங்கல் தகராறில் பாலனை இந்தக் கும்பல் கடத்திச்சென்று அறையொன்றில் கட்டிவைத்து பின்னர் கொலை செய்தது.

சிறுவிளம்பரம்

காணி விற்பனைக்குண்டு

நல்லூர் - நாயன்மார்க்கட்டில் தோட்டக்காணி 4 பரப்பு விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு:- 84/1, மூத்த விநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P - 0777-110578 (719)

நிறைஞ்சனாஸ் சங்கானை

நாகார்ஜுன், பிரபுதேவா நடித்த

அக்னிவர்ஷா

(இந்திப் படம்)

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00 (பு.நே.)

வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45 (பு.நே.)

Mercury Rising

(சி-2386)

நாகம்ஸ் சுன்னாகம்

புதிய வெளியீடாக

பிரசன்னா, அனு, நிரோஷா, வடிவேல் மற்றும் பலர் நடித்த

காதல் டாட் காம்

(ரீல்ஸ்)

(சி-2397)

தினசரி காட்சிகள் : 11.00. 3.00. 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த

கில்லி



காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2387)

# ஆறுமுகம் தொண்டமான் விமான நிலையத்தில் தகராறு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கட்டுநாயக்க விமானநிலையத்தில் பணியாற்றிய உத்தியோகத்தர்களை தூசித்து, அவர்களுடன் தகராறு செய்ததாகத் தெரியவருகிறது.

பெங்களூரில் இருந்து வந்த இவருக்கு முக்கியபிரமுகர்களுக்கு வழங்கப்படும் வாகன வசதி வழங்கப்பட்டபோதும், அதனை ஆறுமுகம் தொண்டமான் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதன் பின்னர் சாதாரண பயணிகள் வருகைதரும் வழியினூடாக விமானநிலையத்திலிருந்து வெளியே வந்த அவர், அதிகாரிகளை இம்சித்து தகராறு செய்துள்ளார்.

இதேவேளை, அவுஸ்ரேலியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க மற்றும் அமெரிக்காவுக்கு சென்றிருந்த முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் நேற்றுமுன்தினம் பிற்பகல் நாடு திரும்பினர். (01)

# விஷ வாயுத் தாக்கத்தால் காலியில் இருவர் பலி!

விஷவாயுத் தாக்கத்திற்குள்ளாகி காலியில் இருவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. காலி மாவட்டத்தின் வத்தேகமவிலுள்ள பள்ளேகல என்ற இடத்திலேயே இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கிணற்றினுள் இறங்கியபோது இவர்களை விஷவாயு தாக்கியிருக்கலாமெனவும், அதனாலேயே இவர்கள் உயிரிழந்திருக்க வேண்டுமென வத்தேகம பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இந்தச் சடலங்களை மீட்பதற்காக கிணற்றினுள் இறங்கிய சமயம் விஷவாயுத் தாக்கத்திற்கு உள்ளாணநிலையில் இரு இராணுவசிப்பாய்கள் கட்டுகஸ்தோட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக வத்தேகம பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# ஹெலஉறுமய, ஜே.வி.பி. ஆகிய இரண்டும் நாட்டை அழிக்கும் பாரிய வெடிகுண்டுகள்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்



ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் நாட்டை அழிக்கும் பாரிய வெடிகுண்டுகள் எனத் தமிழரசுக் கட்சியின், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

தமிழ்மக்களோ, தமிழீழ விடுதலைப் புலிகளோ இலக்குகளைத் தாக்கப் பயன்படுத்தும் குண்டுகளைவிட, இலங்கையை அழிக்கக்கூடிய குண்டுகளைப் பாதுகாத்து வருகிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இதனை சிங்கள மக்கள் அறியாதிருப்பது மிகவும் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும்.

இலங்கையிலுள்ள சிங்கள மக்களின் வாக்குகளில் 45 வீதமான வாக்குகளை மட்டும் பெற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தனக்கு மக்கள் ஆணை கிடைத்திருப்பதாகவும், அரசியல் யாப்பை மாற்றி அமைக்கப்போவதாகவும் தெரிவிக்கிறார்.

நாம் மொத்த தமிழ் வாக்குகளில் 97 வீதமானவற்றைப் பெற்றிருக்கின்றோம். நாமும் தமிழ் மக்கள் எதற்காக எமக்கு வாக்களித்தார்கள் என்பதை மனதிற்கொண்டு செயற்படவேண்டும்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரத்தை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்காதவிடத்து, பேச்சுவார்த்தை தொடங்குவதில் அர்த்தமில்லை. முதலில் குறிப்பிட்ட காலத்திற்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி முன்வைக்க வேண்டும்.

பெரும்பான்மை அரசியல் பலமில்லாத நிலையிலுள்ள ஜனாதிபதி, எவ்வாறு ஆட்சியமைக்கப்போகிறார் என்பதே கேள்விக்குறியாகியுள்ளபோது, சமாதான முயற்சிகளை எவ்வாறு முன்னெடுத்துச்செல்லப் போகிறார் என்பது அனைத்து மக்களுக்கும் சந்தேகமாகவுள்ளது.

தமிழ் மக்கள் மிகவும் கீழிறங்கி வந்தே சமாதான முயற்சிகளில் கலந்துகொள்கின்றனர். இதனைச் சரியாகப் பயன்படுத்தாதுவிட்டால், தமிழருக்குத் தமிழீழம் வழங்கவேண்டிய நிலைக்கு சிங்கள அரசும், மக்களும் உள்ளாவர்.

யுத்தத்தால் மிகவும் நொந்துபோயுள்ள தமிழர்களை மேலும் நோகடிக்கும் முயற்சியில் சிங்கள - பௌத்த பேரினவாதம் முயற்சிப்பது, எமது மக்களின் தனி நாட்டு கொள்கையை வலுவடையச் செய்வதாக அமைந்துவிடும். பேச்சின்மூலம் தீர்வு கிட்டுவதையே அனைவரும் விரும்புகிறோம்.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நாம், என்றும் மக்கள் அளித்த ஆணையை மறவாது, கொள்கைக்கு மதிப்பளித்து நடக்கவேண்டிய பொறுப்பு உண்டு என்பதை நாம் மறந்துவிடாது, செயற்படவேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இனிவரும் எந்தத் தேர்தலிலும் பிக்குமாரை நிறுத்தமாட்டோம்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமது கட்சியின் சார்பாகப் பிக்குமார் போட்டியிட்டபோதிலும், இனிவரும் எந்தத் தேர்தலிலும் பிக்குகளை தாம் போட்டியில் நிறுத்தப்போவதில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

எதிர்வரும் தேர்தலில் தமது கட்சியின் சார்பாக சாதாரண பிரஜைகளை நிறுவத்துவதற்கு ஆராய்ந்து வருவதாகக் கட்சியின் நிறைவேற்றுக்குழுத் தலைவர் வண. எல்லாவல மெத்தானந்த தேரர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

தற்போதைய அரசியல்முறையில் ஏற்பட்டுள்ள சிக்கலுக்கு மத்தியில் பெரும்பான்மை பலம்கொண்ட அரசாங்கம் அமைப்பது தொடர்பாக ஹெல உறுமயவின் பிக்குமார் எதுவித ஒத்துழைப்பும் வழங்கப்போவதில்லை.

நாடாளுமன்ற பிரதிநிதித்துவம், அதிகாரங்கள் குறைந்த அரசாங்க அலகுகள் தொடர்பாகப் பிக்குமாரிடம் எதிர்பார்ப்புகள் கிடையாதென்றும், இதற்கென ஏனையவரை நிறுத்துவது பொருத்தமானது எனவும் எலலாவல மெத்தானந்த தேரர் தெரிவித்தார். இது தொடர்பாக இறுதித் தீர்மானம் ஒன்றை அடுத்து வரும் சில நாட்களில் எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# தென்னாபிரிக்க தேர்தல் முடிவுகளை விடுதலைப் புலிகள் வரவேற்றுள்ளனர்!

## அந்தநாட்டு பத்திரிகை தகவல்

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை அவதானிக்கச் சென்ற விடுதலைப் புலிகளின் குழுவினர் - தேர்தல் முடிவுகளை வரவேற்றுள்ளதாகத் தென்னாபிரிக்க பத்திரிகையான சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இரு பெண் போராளிகள் உட்பட ஐவரைக் கொண்ட இந்த குழு தென்னாபிரிக்காவில் நடந்த தேர்தலைக் கண்காணிக்கச் சென்றிருந்தது. சுதந்திர தேர்தல் ஆணைக் குழுவின் அழைபபின் பேரிலேயே இந்தக் குழு தென்னாபிரிக்கா சென்றிருந்தது.

ஆபிரிக்க தேசிய காங்கிரசுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் பலமான உறவுகளை வைத்திருக்கின்றனர்.

தென்னாபிரிக்காவின் போராட்ட வரலாறும், தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாறும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருப்பதுதான் இந்த உறவுக்குக் காரணம். ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தமது நாட்டிலுள்ள தமிழரின் சார்பாகவே தமிழீழ விடுதலைப் புலிகளை இந்தத் தேர்தலை அவதானிக்க அழைத்திருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலக செயலாளர் புலித்தேவன் - தென்னாபிரிக்காவின் தேர்தலைப் பற்றி தமது கருத்தை தெரிவிக்கையில் -

வாக்களிப்பு சுமுகமாக எந்தவித குழப்பமுமின்றி நடந்ததாகத் தெரிவித்தார். இந்தத் தேர்தல் தென் ஆபிரிக்க வரலாற்றில் முக்கியமாக இடம்பெறவேண்டியதென்றும், இந்தத் தேர்தல் நடந்தமுறை, தமக்கு ஆச்சரியத்தைக் கொடுத்ததாயும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் தேர்தல் ஒழுங்கற்றவையாகவும், கலவரங்களைச் கொண்டதாகவும் நடப்பது வழமை. இந்த வகையில் தென்னாபிரிக்க தேர்தல் மிகவும் பெருமைவாய்ந்ததாகவும், மனதைத் தொட்டதாகவும் அமைந்தது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

தென்னாபிரிக்கா சமாதானத்தை அடைந்ததுபோல, தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானத்தை வெகுவிரைவில் அடைவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புலித்தேவனுடன் பாலசிங்கம் யோகராஜா, அன்ரன் பொன்ராஜா, தமிழ் விழி, மலைமகள், ஆகியோர் தென்னாபிரிக்காவில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து மலையக மக்கள் முன்னணியும் செயற்படும்!

## சந்திரசேகரன் அறிவிப்பு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால நாடாளுமன்ற செயறபாடுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் மலையக மக்கள் முன்னணியும் இணைந்து செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழரசுக் கட்சி - 13 ஆவது நாடாளுமன்றத்தில் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து, இன்று கிளிநொச்சியில் வைத்து முடிவெடுக்கவுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் இந்த முடிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் தமிழரசுக் கட்சியின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர். அதேநேரம், இந்தக் கூட்டத்தில் மலையக மக்கள் விடுதலை முன்னணியின் 2 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளதாக அதன் தலைவர் பி.சந்திரசேகரன் தெரிவித்தார்.

இதன்மூலம், நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வலியுறுத்தலை மேலும் தீவிரப்படுத்தக்கூடியதாக் இருக்குமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

மலையகத்தின் தனித்துவம் தொடர்பிலேயே மலையக மக்கள் முன்னணிக்கு மக்கள் வாக்களித்தனர். இந்த தனித்துவம் என்ற விடயம் தமிழீழ வடுதலைப் புலிகளின் போராட்டம் காரணமாகத் தமிழ்மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

எனவே, இதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல மலையக மக்கள் முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து நாடாளுமன்றத்தில் செயற்படுமெனவும் மலையக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார். (01)

# பிரதேசசபை எதிர்கட்சி தலைவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

கொள்ளைச் சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டதாகக் கூறப்படும் கருவெகஸ்வெவ பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவரை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் நீதிவான் உத்தரவிட்டார்.

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த வாகனம் ஒன்றை மறித்து குறிப்பிட்ட பிரதேசசபை எதிர்க்கட்சி தலைவரின் தலைமையிலான குழுவினர் கொள்ளையிட முயற்சித்தார்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே பிரதேசசபை எதிர்க்கட்சி தலைவர் கைதுசெய்யப்படடார் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# காயம் ஏற்பட்டதாக அக்தர் ஏமாற்றினாரா?

## விசாரணை நடத்துவதற்கு முடிவு



பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர்களில் ஒருவர் சொகைப் அக்தர். இவர் ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் எனவும் அழைக்கப்படுகிறார்.

இவர் இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்டில் 2 ஆவது நாள் பந்து வீசும் போது கையில் காயம் ஏற்பட்டு தொடர்ந்து பந்து வீச இயலாமல் பெவிலியன் திரும்பினார். அன்று முழுவதும் அவர் பந்து வீசவில்லை.

ஆனால் பாகிஸ்தான் துடுப்பாட்டம் செய்த நாலாவது நாளன்று அக்தர் அதிரடியாக ஆடி 2 சிக்ஸர், 4 பவுண்டரிகள் அடித்து 28 ரன்கள் எடுத்தார். இதுதான் அவருக்கு இப்போது தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

பந்து வீச இயலாதபோதுஅதிரடியாக ஆடி எப்படி ரன்களை குவிக்க முடியும் என சர்ச்சை எழுந்துள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியார் கான் கூறியதாவது -

அக்தருக்கு மருத்துவ பரிசோதனை அளிக்கப்படும். மேலும் டெஸ்ட் தொடரில் காயம் அடைந்த எல்லா வீரர்களுக்கும் பரிசோதனை செய்யப்படும். அவர்களுக்கு ஏற்பட்டுள்ள காயம் லேசானதா அல்லது மோசமானதா எனக் கண்டறியப்படும். இதற்காக 3 பேர் கொண்ட மருத்துவக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு வீரர்களுக்கு பரிசோதனை செய்து அறிக்கை தாக்கல் செய்யும். இதனடிப்படையில் எவரேனும் தவறு செய்திருந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

முழு உடல் தகுதியுடன் இல்லாதவர்கள் தங்கள் பங்கினை நாட்டிற்காக அளிக்க முடியாது. தேசப்பற்றுடன் உள்ளவர்களே அணிக்குத் தேவை இவ்வாறு அவர் கூறினார்.

அக்தர் மீது முன்னாள் பாகிஸ்தான் வீரர்கள் பலர் சரியாகப் பந்து வீசவில்லை என குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த நிலையில் கப்டன் இன்ஸமாம் 3 ஆவது டெஸ்டின்போது அக்தர் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாகவும் அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்எனவும், இல்லையென்றால் எனது கப்டன். பதவியை ராஜினாமா செய்வேன் எனவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் கூறியுள்ளார்.

## விளையாட்டு

## இலங்கை - சிம்பாப்வே இன்று மோதுகின்றன!

(கொழும்பு)

அத்தப்பத்து தலைமையிலான இலங்கை அணி, சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து 5 ஒருநாள் போட்டி மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகின்றது.

இரு அணிகளுக்குமிடையிலான முதல் ஒருநாள் போட்டி இன்று ஹராரேயில் நடைபெறுகின்றது. சிம்பாப்வே அணியில் அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டு 18 வயதான தைபு கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இரு அணிகளின் விவரம் வருமாறு -

சிம்பாப்வே - தைபு (கப்டன்), இப்ராகிம், ஜிம்கும்ப்ரா, மேட்சிகேன்யேரி, மேர்க்வேட், நக்லா, வடிங்டன், டெய்லர், ஹொண்டா, எட்வர்ட், சிபான்டா, பன்யங்ரா.

இலங்கை - அத்தப்பத்து (கப்டன்), ஜெயவர்த்தன, ஜெயசூர்யா, சங்ககார, தில்சான், ஆர்னல்ட், ஜெயந்த சமிந்த வாஸ், சொய்சா பெர்னாண்டோ, குலசேகரா, ம.்.றூப், முரளிதரன், ஹேரத்.

## ஒலங்கா திருமணம்



சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர் ஒலங்கா.

27 வயதான ஒலங்கா, 34 வயதான டாரா ரீட் என்ற அவுஸ்ரேலியப் பெண்ணை கடந்த சனிக்கிழமை திருமணம் செய்துகொண்டார். டாரா ரீட் உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

# பதான், பாலாஜியின் வருகையால் பந்துவீச்சில் முன்னேற்றமுள்ளதாம்!

## இந்திய அணித்தலைவர் கங்கூலி தெரிவிப்பு

(கொல்கத்தா)

இர்பான்பதான், பாலாஜி ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் இந்திய அணி பந்துவீச்சில் வலிமைபெற்று உள்ளது என்று கப்டன் கங்கூலி கூறினார்.

பாகிஸ்தானில் 40 நாட்கள் சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டு இந்திய கிரிக்கெட் அணி நாடு திரும்பியது.

இந்தநிலையில், வீரர்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு நேற்றுமுன்தினம் திரும்பினர். சொந்த ஊர் திரும்பிய வீரர்களுக்கு அவரவர் மாநிலத்தைச் சேர்ந்த கிரிக்கெட் சபை சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஏராளமான ரசிகர்களும் கலந்து கொண்டனர்.

கொல்கத்தா சென்றடைந்த கங்கூலி விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியதாவது -

பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணிலேயே வீழ்த்தியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பாகிஸ்தான் தொடரில் நமது அணியினர் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி சிறப்பாக ஆடினர்.

குறிப்பாக வேகப்பந்து வீச்சாளர்கள் இர்பான்பதான், பாலாஜி ஆகியோரின் பந்துவீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. இவர்களின் சிறப்பான பந்துவீச்சினால் இந்திய அணி தற்போது பந்துவீச்சில் வலிமை பெற்றுள்ளது. காயம் காரணமாக ஆடாமல் இருந்து வரும் சகீர்



கான் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் ஆகியோர் காயத்தில் இருந்து குணமடைந்து அணிக்கு மீண்டும் திரும்பும் பட்சத்தில் நமது அணியின் பந்துவீச்சு மேலும் வலுப்பெறும் என்பதில் சந்தேகமில்லை.

பொதுவாக ஒவ்வொரு தொடரும் முக்கியமானவைதான். ஆனால், பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி என்றால் அதிக எதிர்பார்ப்பும் முக்கியத்துவமும் கொடுக்கப்படும். அப்படி இரு அணிகளும் மோதும்போது இரு அணிகளுக்குமே அதிக அளவில் நெருக்கடி ஏற்படும். அதில் சிறந்த அணி வெற்றிவாகை சூடும்.

அவுஸ்ரேலிய பயணத்தின்போது, அந்த அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி சிறப்பாக ஆடி தொடரை 1:1 என்ற கணக்கில் சமநிலை அடையச் செய்தது.

பாகிஸ்தான் தொடரில் யுவராஜ்சிங், பதான், பார்த்தீவ் பட்டேல் ஆகியோரது துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. அடுத்த தொடருக்கு சில மாதங்கள் இருப்பதால் நீண்ட ஓய்வுக்கு பின்னர் அடுத்த போட்டியில் ஆடவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

துணை கப்டன் ராவிட்டும், நட்சத்திர வீரர் டெண்டுல்காரும் பாகிஸ்தான் தொடர் வெற்றி குறித்து கூறுகையில்,

'அணியின் ஒட்டுமொத்த கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகும்' என்றனர்.

இந்தநிலையில்- பாகிஸ்தான் மண்ணில் ஒருநாள் போட்டித் தொடரையும் டெஸ்ட் தொடரையும் கைப்பற்றி சாதனை படைத்த இந்திய அணியினருக்கு பிரதமர் வாஜ்பாய் தேநீர் விருந்தளிக்கவுள்ளார் என விளையாட்டுத் துறை அமைச்சர் விஜய்கோபால் தெரிவித்தார்.

# மாரடைப்பால் பாதிக்கப்பட்ட மரடோனா வைத்தியசாலையில் உயிருக்கு போராட்டம்!

## போதைப்பொருள் பாவனையே காரணமாம்

ஆர்ஜன்ரீனாவின் முன்னாள் உதைபந்தாட்ட அணித் தலைவர் டிகாயோ மரடோனா கடும் இரத்த அழுத்தம் மற்றும் சுவாசிப்பதற்கு பெரும் கஷ்ரம் காரணமாக அவதிப்படும்வேளை மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளாரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் ஆர்ஜன்ரீனாவின் உதைபந்தாட்ட அணியின் தலைவராக இருந்தசமயம் உலகக் கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

43 வயதுடைய மரடோனா, தனது சக விளையாட்டு வீரரை சந்தித்தபின் ஒரு மணிநேரத்துக்குள் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த பல வருடங்களாக மரடோனா போதைப் பொருளுக்கு அடிமையாகியிருந்தார். இதனால் இப்போது அவர் சுவாசம் சம்பந்தமான நோய்களால் அவதியுறுகிறார்.

மரடோனாவின் குடும்பத்தவர், நண்பர்கள்,



ரசிகர்கள் ஆகியோர் மரடோனா அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலையை முற்றுகையிட்டுள்ளனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

போதைப்பொருள்களின் அதிக பாவனையால் 2000 ஆம் ஆண்டு பல தடவைகள் மரடோனா மாரடைப்பினால் பாதிக்கப்பட்டு, கியூபாவில் நீண்டகாலம் சிகிச்சை பெற்றிருந்தார்.

மரடோனா 20 வருடங்களாக உதைபந்தாட்ட உலகில் நட்சத்திரமாகத் திகழ்ந்தார். 1982 ஆம் ஆண்டு பர்சலோனாவில் நடைபெற்ற போட்டியில் திறமையாக விளையாடி 3 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றார்.

ஸ்பெயினில் நடைபெற்ற உலகக் கோப்பைக்கான போட்டியில் இவரது தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணி வெற்றிவாகை சூடியது.

1984 ஆம் ஆண்டு றப்போலி உதைபந்தாட்டக்குழுவுடன் தன்னை இணைத்துக்கொண்ட மரடோனா, 7.5 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்று உலகசாதனை நிலைநாட்டினார்.

போதைப்பொருளுக்கு அடிமையாக இருந்தாலும் இவருக்கு உலகம் பூராவும் 20,000 இரசிகர்கள் உள்ளனர்.

# மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து 2 விக்கெட்டுக்களால் வெற்றி!



(கஜானா)

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கஜானாவில் நேற்று நடந்த சர்வதேச ஒருநாள் போட்டியில், இங்கிலாந்து அணி, இரண்டு விக்கெட்டுக்களால் மேற்கிந்தியத் தீவுகள் அணியைத் தோற்கடித்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதன்படி மேற்கிந்தியத் தீவுகள் துடுப்பெடுத்தாடியது.

மோசமான காலநிலை காரணமாக 30 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. அத்துடன் காயம் காரணமாக விளையாடாத மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் லாராவுக்குப் பதிலாக சர்வான் நேற்யை போட்டியில் அணித் தலைவராக இருந்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணி சார்பாக சந்திரபோல் சிறப்பாக விளையாடி 96 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக 84 ஓட்டங்களையும், ஜோசப் 23 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் டரன்கோ, பிளின்ரொப் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கிளார்க் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

பதிலுக்கு 157 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் விளையாடத் தொடங்கிய இங்கிலாந்து அணி, 8 விக்கெட்டுக்களை இழந்து 29.3 ஓவர்களிலேயே வெற்றி இலக்கையடைந்தது.

இது இங்கிலாந்து அணி சிறப்பாகக் கொண்டாடக்கூடிய வெற்றியாக அமையவில்லை.

இந்த அணி சார்பாக திரஸ் கோதிக் 26, ஸ்ரஸ் 29, பிளக்வெல் 27 ஓட்டங்களைப் பெற்றபோதும் றீட் சிறப்பாக விளையாடி 15 பந்துகளில் 3 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி



அடங்கலாக 27 ஓட்டங்களைப் பெற்றார். இவரே இந்த ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரராகவும் தெரிவானார்.

பந்து வீச்சில் - கைல் 2, பிரொவோ 2, டிலான் மற்றும் ராம்பவுல் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஏழு போட்டிகள் கொண்ட தொடரில், இங்கிலாந்து முதல் போட்டியில் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உயர் பாதுகாப்பு வலய பகுதியில்

# மீளக்குடியமர்ந்தோர் மீது கெடுபிடிகள் அதிகரிப்பு

வலிகாமம் வடக்கின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்கப் பாதுகாப்பரண் பகுதிக்கு முன்பாகவுள்ள 100 மீற்றர் பகுதியை சூனியப் பிரதேசமெனக்காட்டி, மீளக குடியமரும் குடும்பங்கள் மீதான கெடுபிடிகளைப் படைத்தரப்பு அதிகரித்து வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

படையினரின் பூரண கட்டுப்பாட்டின்கீழ் முழுமையாக குடாநாடு உள்ளநிலையில், இவ்வாறான சூனியப்பிரதேசம் ஏன் அமைந்துள்ளது எனவும், வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் நலன்புரி அமைப்புகளது பிரதிநிதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

விடுதலைப் புலிகளது நிலைகளோ அல்லது பிரசன்னமோ வலி. வடக்கின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தையண்டிய பகுதிகளில் இலலை. அத்துடன், முன்னரங்கப் பாதுகாப்பரண் பகுதியைத்தாண்டி வெளியார் எவருமே உயர் பாதுகாப்பு வலயத்தினுள் நுழையவும் முடியாது. இந்த நிலையில், இவ்வாறான சூனியப் பிரதேசம் அநாவசியமற்றதோர் விடயம் எனவும், அந்தத் தரப்புகள் மேலும் தெரிவித்தன.

இதனிடையே வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர அனுமதி மறுககப்பட்டுள்ள 600 மீற்றர் தூரத்திற்கு வெளியேயுள்ள பகுதியில் - மீளக் குடியமர்ந்த 8 குடும்பங்களை அங்கிருந்து வெளியேறுமாறு படையினர் நிர்ப்பந்தித்து வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது. பன்னாலைக் கிராமத்தில் அண்மைக்காலப் பகுதியில் மீளக்குடியமர்ந்த இந்தக் குடும்பங்கள் - உரிய அனுமதியை பெற்றுக்கொள்ளவில்லை எனக் கூறிப் படையினர் அவர்களை வெளியேறுமாறு வற்புறுத்தி வருகின்றனர்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலக அதிகாரிகள் - படைத்தலைமையுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

பன்னாலைப் பகுதியில் இடம்பெயர்ந்த அந்தப் பகுதி மக்களைச் சுமுகமாகக் குடியேற, தாங்கள் போதிய ஒத்துழைப்புக்களை நல்குவதாகப் படைத்தரப்பு பேச்சின்போது உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(202)

## வண்டிலுடன் சேர்த்து வைக்கோலும் தீ வைப்பு

வைக்கோலினை விற்பனை செய்வதற்காக வண்டிலில் ஏற்றிவந்து வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது, விஷமிகளால் வண்டிலுடன் சேர்த்து வைக்கோல் தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவமொன்று கைதடி- நாவற்குழி தெற்குப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வைக்கோல் வியாபாரியான க.பிள்ளைநாயகம் என்பவரது வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (29)

## பொதுக்கூட்டம்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுக்கூட்டம் - எதிர்வரும் 25 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைவரான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள பொதுச்சபைக் கூட்டத்தில், நடந்துமுடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் குறித்தும், கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### காவல்துறை, நீதிமன்ற நடவடிக்கைகள்

# மட்டக்களப்பு நகரில் மீண்டும் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் - காவல்துறை நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்கள் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளதாக மட்டககளப்பு, அம்பாறை மாவட்டங்களின் சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

கருணாவினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கைகள் காரணமாக, இந்தப் பகுதியில் இயங்கி வந்த ஆறு காவல்துறை நிலையங்களும், நீதிமன்றங்களும் செயலிழக்கச் செய்யப்பட்டிருந்தன.

தற்போது இந்த மாவட்டங்கள் மீண்டும் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டதையடுத்து, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயல்பு வாழ்க்கையையும், சட்ட ஒழுங்கையும் மீள நிலைநாட்டும் வகையில், இந்த நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கேணல் ரமேஸ் மேலும் குறிப்பிட்டார்.



கிட்டு பூங்காவில் நேற்று நடைபெற்ற அன்னைபூபதி நினைவு நிகழ்வில் கலந்துகொண்ட ஒருவர் நினைவுரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.



கலட்டி தமிழ்க் கலவன் பாடசாலையில் சுவிஸ் அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.காங்கேயன் நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம். (111)

# எரிந்தநிலையில் காணப்படும் கதுறுகொட விகாரை பெயர்ப்பலகை

இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்ட 'கதுறுகொட விகாரை' எனும் பெயர்ப்பலகை - எரிந்தநிலையிலேயே தொடர்ந்தும் காணப்படுகிறது. கந்தரோடையிலுள்ள வரலாற்றுச் சின்னங்களைக்கொண்ட இடத்தை, விகாரையின் பெயரிலே குறித்தே இப்பெயர்ப்பலகை, சுன்னாகம் சந்தியிலே நிறுவப்பட்டிருந்தது.

இது நிறுவப்பட்ட சில தினங்களிலேயே இப்பெயர்ப்பலகை இனந்தெரியாதோரால் தீயிட்டு கொழுத்தப்பட்டது. இதனால், இப் பெயர்ப் பலகையின் பெரும்பாலான பகுதிகள் தீயினால் எரிந்து சேதமாகின.

தொடர்ந்தும் சேதமானநிலையிலேயே பெயர்ப் பலகை காட்சியளிக்கிறது. கந்தரோடை என்பதை பெயர் மாற்றியே கதுறுகொட என எழுதப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (94)

# திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க மானிப்பாயில் துண்டுப்பிரசுரம்

### குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் வெளியீடு

மானிப்பாய் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் - தமது எலலைப் பகுதியில் களவுகளைத் தடுக்க கருத்தமர்வுகளையும், துண்டுப் பிரசுரங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இது குறித்து மானிப்பாய் பொலிஸ்நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளனர். மானிப்பாய் பொலிஸ் நிலையப் பிரிவுக்குள் திருடர்களால் கடைகளும், வீடுகளும் உடைக்கப்படும் செயல் விரைவாக அதிகரித்து வருகின்றது. இது தொடர்பாக பல தகவல்கள் பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்துள்ளது. எனவே, பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாட்டின் சமாதானத்தையும், பிரதேச பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

வீடுகளிலும், வியாபார நிலையங்களிலும் முன்னும் பின்னுமாக மின் குமிழ்களை இட்டு, அதனை ஒளிரவிடுங்கள். இரவு வேலைகளில் கதவுகள், யன்னல்கள் என்பவற்றுக்கு உறுதியான பூட்டுக்களை இடுங்கள். சந்தேகமானமுறையில் நடமாட்டங்களைக் கண்டால், உடன 2223160 இலக்கத் தொலைபேசிக்கு அறியத்தரவும். வீடுகளுக்கு வெளியே இரும்புக் கம்பிகள், உலக்கை போனற பொருட்களை வைக்கவேண்டாம் என அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நவாலிப் பகுதியில் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட மூவர் -திருடப்பட்ட பணத்தைப் பங்கிடும்போது, எமது ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரின் கையில் சிக்கினர்.

இதனால், ஒரு தொகைப் பணம் கைப்பற்றப்பட்டதாகவும் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொலிஸார் தொவித்தனர்.

(91)

# பத்மஸ்ரீ காசிம் மௌலவியின் நாதஸ்வர இசை நிகழ்வு

இந்தியாவில் புகழ்பெற்ற நாதஸ்வரக் கலைஞரான பத்மஸ்ரீ காசிம் மௌலவியின் நாதஸ்வர இசை நிகழ்வுகள் - யாழ்.குடாநாட்டின் பல்வேறு தேவாலயங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது.

பிறப்பால் ஒரு முஸ்லிமான இவ- இந்து சமயத்திற்கே தனித்துவமான நாதஸ்வரக்கலையைக் கற்று, அதல் பத்மஸ்ரீ விருதைப் பெற்றுள்ளதோடு, கிறிஸ்தவ மதத்திற்கு மாறி, அந்த மதப் பாடல்களை நாதஸ்வரத்தில் இசைத்து வருகிறார்.

இவரது நாதஸ்வர இசை நிகழ்வினைப் பார்வையிடுவதற்கு ஏராளமான ரசிகர்கள் கூடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர் கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணம் வருகைதந்தார். இவரது நாதஸ்வர இசை நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இராசாவின் தோட்ட வீதியிலுள்ள தேவசபை வழிபாட்டு மையத்தில் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு

### இன்றுமுதல் ஆரம்பமாகிறது

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கணித, விஞ்ஞான, ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் - இன்றுமுதல் தொடர்ந்து மூன்று நாட்கள்வரை வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இன்றுகாலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை - 10, 11 ஆம வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், நாளை காலை ஆங்கில பாடத்தில் அடிப்படைத் தேர்ச்சிகளை அடையாளப்படுத்துதலும், விருத்தி செய்தலும் தொடர்பாக இடைநிலை ஆசிரியர்களுக்கான செயலமர்வும், நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்ப பிரிவுகளின் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான அடிப்படைத் தேர்ச்சிகளிலான பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

இந்தச் செயலமர்வுகளில் குறித்த பாடம் தொடர்பாகக் குறைந்தது ஒரு ஆசிரியராவது பங்குபற்ற வேண்டுமெனவும், அடிப்படைத் தேர்ச்சிகளைக் கண்டறிவதற்குப் பொருத்தமான கைந்நூல்களை ஒவ்வொரு பாடசாலை ஆசிரியரும் கொண்டுவருதல் வேண்டும் எனவும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கேட்டுள்ளார். (25)

# மின்கம்பங்கள் வந்தபோதிலும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை

பின்தங்கிய கிராமங்களுக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட நிதி 2003 ஆம் ஆண்டில் நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சாரம் வழங்கலுக்கென ஒதுக்கப்பட்ட நிதிக்கான ஆரம்பக்கட்ட வேலையாக தற்போது ஒரு தொகுதி மின்கம்பங்கள் நெடுந்தீவுக்கு மின்சாரசபையினரால் எடுத்துவரப்பட்டது.

ஆனால், அந்தப் பகுதியில் மின் நிலையம் அமைப்பதற்கான ஆயத்தங்களோ, வேலைகளோ இதுவரை நடைபெறாததுடன், மின்கம்பங்கள் நாட்டுவதற்கான பணிகளும் இடம் பெறவில்லை.

2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவேண்டிய வேலை இன்னும் இழுத்தடிக்கப்பட்டு வருதனால், அந்தப் பகுதி மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

இதேவேளை நெடுந்தீவு மத்தி, கிழக்குப் பகுதிக்குகென இவ்வாண்டு 5 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டபோதும், இதறகான வேலைகளும் இடம் பெறவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது. (113)

### இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்




பெயர் : ல.நியூசியா
முகவரி : இல:4, செல்மேரிஸ் வீதி, நாவாந்துறை.

எட்டாவது அகவையில்



பெயர் : கோபிகா
முகவரி : நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------------------
முகவரி:------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்




# இன்சுலின்



உலகில் அதிகளவான மக்களைச் நீரிழிவு நோய் பாதித்துள்ளது. இந்தநோய் இன்சுலின் எனப்படும் ஓமோனின் குறைபாட்டினால் ஏற்படுகிறது. இரத்தத்தில் காணப்படும் சீனியின் அளவை ஓமோன் கட்டுப்படுத்துகின்றது. இந்தநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்சுலின் எனப்படும் ஓமோன்களை ஊசியின் மூலம் இரத்தத்தில் செலுத்தி நோயைக் கட்டுப்படுத்தமுடியும். இதனால் இன்சுலின் ஏற்றிக்கொள்வதற்கு வைத்தியரின் உதவியை அடிக்கடி நாடவேண்டியுள்ளது.

இடுப்புப்பட்டிகளில் வைத்துக் கொண்டுசெல்லப்படும் இன்சுலின் நிரப்பிய பம்பிகள்மூலம் தேவைப்படும் நேரங்களில் இன்சுலினை தமக்கு தாமே செலுத்திக்கொள்ளும் முறை அண்மைக் காலத்தில் வளர்ந்த நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. தற்போது எவரும் எளிதில் பாவிக்ககூடிய பிளாஸடர்களை அறிமுகப்படுத்தவுள்ளனர். மூன்று நாட்களுக்குத் தேவையான இன்சுலின், இந்த பிளாஸ்ரர்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தப் பிளாஸ்ரர்களில் இன்சுலினை உடலில் செலுத்துவதற்கான ஊசி சிறியளவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் நோயாளி தோலின்மீது இலகுவில் பொருத்திக்கொள்ளமுடியும். மேலும் முதுமை அடைந்தவர்கள், கண்பார்வை குறைந்தவர்கள், படுக்கையில் உள்ளவர்களும் இலகுவில் பாவித்துக்கொள்ளமுடியும். மேலும் இவை உடலின் இன்சுலினை சீரான அளவில் செலுத்துகின்றன.

# ஜெலிதரும் கிலி





ஐரோப்பிய நாடுகளில் ஜெலி தீன்பண்டங்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஏனெனில், இவை அடைக்கப்படுகின்ற பிளாஸ்ரிக் கப்கள் உடல் நலத்துக்கு தீங்கானவையாக இருப்பதாலாகும். இவற்றில் காணப்படுகின்ற ஒரு வகையான பசைத்தன்மைகூட, அதாவது ஒட்டும் தன்மை குழந்தைகளுக்குப் பலநோய்களைக் கொண்டுவருவதாக அறியப்படுகிறது.

ஆராய்ச்சிகளின்படி ஜெலி உணவுகளை அதிகம் உண்பவர்களுக்கு குருதி அமுக்கம் அதிகரித்திருக்கின்றது.



குறிப்பாக, ஜெலி உணவுகளை சிறுவர் முதல் பெரியவர் வரை விரும்பி உண்பதால், இதன் தடை ஐரோப்பிய நாடுகளில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜெலி உணவுகள் இருந்தால் இனி கடைகளுக்கு சீல்தான்.

# பனிப்பாறைகள் உருகுமா?



உலகில் சூழல் வெப்பநிலை அதிகரித்துக்கொண்டு செல்கிறது. தொடர்ந்து வெப்பநிலை அதிகரித்துக்கொண்டு சென்றால், 1000 ஆண்டுகளில் கிரீன்லாந்தின் பனிப்பாறைகள் உருகிவிடலாம் என நேசசர் சஞ்சிகை தெரிவித்துள்ளது. இதனால், 2350 ஆம் ஆண்டளவில் 8 பாகை சென்ரிகிரேட் வரை உயரலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கடல்மட்டம் 23 அடி வரை உயரலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.


உலகில் அந்தாட்டிக்காவிற்கு அடுத்ததாக கிரீனலாந்து அதிகளவான பனிப்பாறைகளைக் கொண்டுள்ளது. இதேவேளை, வளிமண்டலத்தின் காபனீரொட்சைட்டின் அளவைக் கட்டுப்படுத்தாவிட்டால், சூழல் வெப்பம் அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் கிரீன்லாந்தின் பனிப்பிரதேசங்கள் முழுவதும் அகற்றப்படும் நிலையில், நிலமட்டம் கீழ்நோக்கிச் செல்லும் எனவும், சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும் ஆற்றல் குறைந்துவிடலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால், வெப்பநிலை அதிகரிக்கலாமெனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. அந்தாட்டிக்காவில் பனிப்பாறைகள் தொடர்ந்து வளர்ந்துகொண்டு செல்கின்றன. ஆனால், உருகிய பனிப்பாறைகள் மீண்டும் வளரும் சாத்தியங்கள் குறைவாகவே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. உலகில் தொழில் மயமாக்கப்படுவதற்கு முன்பிலும், தற்போது காபனீரொட்சைட்டின் வீதம் வளிமண்டலத்தில் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# வேண்டாத வெட்டுக்கிளிகள்

அளவில் சிறியதுதானே என்று நாம் பல தடவைகளில் பலவற்றை அலட்சியம் செய்வதுண்டு. ஆனால், அதே சிறுசுகள் ஒன்றுகூடும்போது பலம் மிக்கவையாகி விடுகின்றன. தனியனாக எதிர்கொள்ளாமல் ஒரு படையாக வந்து மோதும்போது, இதன் தாக்கங்கள் பெரியளவில் ஏற்பட்டு விடுகின்றன.

வெட்டுக்கிளி என்பது ஒரு சிறிய உயிரினந்தான். ஆனால், இந்தச் சிறிய உயிரினம் படையெடுத்து வரும்போது, பெருநாசத்தை விளைவித்து விடுகிறது. தெற்கு அவுஸ்ரேலியாவின் விவசாயிகள் இவற்றின் படையெடுப்பால் ஆட்டம் கண்டு போயிருக்கின்றார்கள். அதுவும் இங்குள்ள விவசாயிகள் ஒரு மோசமான காலகட்டத்தில் இருக்கும்போது, இந்த வெட்டுக்கிளிகளின் தொல்லையும் வந்து சேர்ந்திருக்கின்றது. கடந்த 100 வருடங்களில் என்றும் இல்லாத வாறு, இங்கு ஏற்பட்டுள்ள வரட்சியும், காட்டுத்தீயும் பெரும் தாக் கத்தை விவசாயிகளுக்கு அண்மைக்காலத்தில் ஏற்படுத்தி இருந்தன.



இப்படியொரு நிலையில்தான் இந்த வெட்டுக்கிளிகளின் உபத்திரவமும் வந்து சேர்ந்திருக்கிறது.

வரட்சியைத் தொடர்ந்து இங்கு பெய்த சிறு மழை, விவசாயிகளுக்கு மகிழ்ச்சிக்குப் பதிலாகக் கலக்கத்தையே தந்திருக்கிறது. இந்தச் சிறுமழை, பயிர்களிடையே புல் வளர உதவ, இந்தப் புல்லை உண்ண, வெட்டுக்கிளிகளையும் வரவழைத்து இருக்கின்றது. நிலம் ஈரலிப்பாக இருப்பது, இந்த வெட்டுக்கிளிக்கு, முட்டை யிட்டு, பல்கிப் பெருகவும் வசதியாகிவிட்டிருக்கின்றது.



தினமும் காலையில் இந்த வெட்டுக்கிளிகள் - கூட்டமாக மணிக்கு 3 தொடக்கம் 50 கிலோமீற்றர் வேகத்தில் பறக்க ஆரம்பித்து விடுகின்றன என்கிறார்கள். பின்பு இவை பரவி, பயிர் பச்சைகள்மீது உட்கார்ந்து கொள்கின்றன. மாலை 4 மணியளவில் இந்தப் பிரதேசத்தின் முழு வயல்களையும் ஆக்கிரமித்துக் கொள்ளும் இந்த வெட்டுக்கிளிகள், பயிரை கபளீகரம் செய்து விடுகின்றன என்றார் ஒரு விவசாயி. காலையில் வயல்களைப் பார்த்தால் பயிர்கள் அடியோடு அழிக்கப்பட்டு இருப்பதைக் காணலாம் என்று மேலும் கூறுகின்றார் இந்த விவசாயி. இவர் நியூ சவுத் வேல்ஸ் பிராந்தியத்தில் விவசாயம் செய்பவர்.

வெட்டுக்கிளிகளின் படையெடுப்பும் அழிவும் புதிய கதையல்ல. பழைய ஏற்பாட்டில் இதே அழிவு முன்பும் ஏற்பட்டிருப்பது சொல்லப் படுகிறது. எக்ஸோடஸ் என்ற அத்தியாயத்தில் இது சொல்லப் பட்டுள்ளது. எகிப்தைத் தண்டிக்க கடவுள் வெட்டுக்கிளிகளைப் படைபடையாக அனுப்பி இருக்கின்றார். காலையானபோது கிழக் கிலிருந்து வீசிய காற்று தொகை தொகையாக வெட்டுக்கிளி களைக் கொண்டு வந்து சேர்த்தது. எகிப்தை நிறைத்த இந்த வெட்டுக்கிளிகள் பூமியை இருட்டாக்கின என்று பைபிளில் சொல்லப்படுகின்றது. அரசு உஷாராகி இருக்கின்றது. வானிலிருந்து மருந்துகள் வானூர்தி வழியாகப் பீச்சி அடிக்கப்படுகினறன. முடடை பொரித்து வெளியே வரும் சிறிய குஞ்சு வெட்டுக்கிளிகளை அழிப்பதே இவர்களது நோக்கமாக இருக்கின்றது. இந்த வளியில் வெட்டுக்கிளிகள் சற்றே அழிக்கப்பட்டு விட்டாலும் வசந்த காலத்தில் பச்சைப்பசேலென்று வளரும் பயிர்கள் மேலும் பல வெட்டுக்கிளிகளை வரவழைக்கப் போகின்றன என்ற கலக்கம் விவசாயிகளைப் பீடித்து இருக்கின்றது.


படையாக வரும் ஒரு கூட்டத்தில் எத்தனை வெட்டுக்கிளிகள் இருக்கலாம்? ஒரு கூட்டத்தில் 40 பில்லியன் தொகை வரையிலான வெட்டுக்கிளிகள் இருக்கலாம் என்கிறார்கள். இப்படி ஒரு இராட்சத தொகை படையெடுத்தால் பெருநாசம் ஏற்படுவது என்பது திண்ணந்தான். கறுத்த மேகக் கூட்டங்கள் பவனி வருவது போல 50கி.மீற்றர் தொலைவுக்கு இந்த வெட்டுக்கிளிகள் பறந்து வருவதைப்பார்க்க முடியும் என்கிறார்கள். இவை 500 தொடக்கம் 600 அடி உயரம் வரையில் பறக்கின்றன. இப்படித்தான் ஆபிரிக்க நாடான சோமாலியாவில் வெட்டுக்கிளிகள் பெரிய அட்டகாசம் செய்திருந்தன. ஒரு வருடத்தில் 400,000 மக்களுக்கு கொடுக்கக் கூடிய உணவை இவை தின்று அழித்திருந்தன. 1000 சதுர.கி.மீற்றர் பரப்பளவு பிரதேசத்தை அவை தம்படையெடுப்பின் போது ஆக்கிரமித்து இருந்தன.

ஒரு பெண் வெட்டுக்கிளி 60 தொடக்கம் 100 வரையிலான முட்டைகளை ஒரே தடவையில் இடும் என்பதால் இவை பல்கிப்பெருகும் வேகம் உங்களுக்கு நன்றாகவே புரிந்திருக்கும். ஆனால் இன்னொரு சுவையான தகவலையும் நீங்கள் அறிந்தாக வேண்டும் இதன் ஆயுள் காலம் வெறும் 30 நாட்கள் தான் படைபடையாக வந்து சேரும் இந்த வெட்டுக்கிளிகளில் 90 வீதமானவை சீக்கிரமாகவே இறந்து போய்விடுகின்றன . ஆனால் அதற்குள் தமது இனவிருத்தி நடவடிக்கையை மேற்கொண்டு விடுகின்றன. இறைவன் படைப்பில்தான் எத்தனை அதிசயங்கள்...?

# டாஸ்போர்ட்டுக்குள் உலகம்



காரினுடைய டாஸ்போர்ட்டுக்குள் (**Dashboard**) முழு உலகத்தையுமே பார்க்கக்கூடிய வசதியை மேலைத்யே நாடுகள் கண்டுபிடித்து இருக்கின்றன. கார்களில் காணப்படுகின்ற டிஜிட்டல் டாஸ்போர்ட் - பலவகையான அம்சங்களை தன்னகத்தே கொண்டிருக்கிறது. தற்போது எல்லாக் கார்த் தயாரிப்பு நிறுவ்னங்களும் **IBM** கணினி நிறுவனத்தை மொய்த்துக்கொண்டிருக்கின்றன. ஏனெனில், **IBM** கம்பனிதான் முதன் முதலில் இந்தவகையான கார் டிஜிட்டல் டாஸ்போர்ட்டினைத் தயாரித்தது. காருடன் கதைக்கக்கூடிய வசதிகள் இங்கே காணப்படுகின்றன. ஓட்டுநருக்கு எல்லா வகையிலும் உதவி செய்யக்கூடிய வகையிலும் டாஸ்



போர்ட்டுக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தூரம் கூடிய இடங்களுக்கு இவ்வகையான கார்களில் பிரயாணம் செய்யும் போது, பயண அலுப்புத் தெரியாமலிருக்க இன்ரநெற், ஈமெயில், கையடக்கத் தொலைபேசி, தொலைக்காட்சி இவற்றுடன் பேசும் கார் அமைப்பு ஆகியனவும் காணப்படுகின்றன. இனி சாதர்ரண கார்களுக்கு மவுசில்லை.

## திரை விமர்சனம்

### குத்து

ஊரிலுள்ள எல்லா மசாலா பொருட்களையும் சேர்த்து வைக்கப்பட்ட சாம்பார் தான் குத்து. ஆனால் இது சாப்பிட்டவுடன் வயிற்றைப் பிசையவைக்கின்ற அசாதாரணமான கலவை. முந்தைய படமான 'தம்' இற்கும் இப்போதைய படமான 'குத்து' இற்கும் பெரிதாக வித்தியாசம் இருக்கின்றது. இயக்குநர் வெங்கடேஷ். பணக்கார தாதா கலாபவன்மணி. அவரின் ஒரே பெண்




திவ்யா பந்தனாஸ். கல்லூரிக்குப் படிக்கவரும் அவரிடம் காதல் வயப்படுகிறார் சிம்பு. சாதாரண சிம்புவிற்கும், பணக்காரப் பெண்ணுக்கும் காதல் - நடக்கிற காரியமா? குறிக்கிடும் அப்பனை வழக்கம்போல விளாசுகிறார் சிம்பு. முடிவில் வில்லன்கள் ஓட, காதல் வெற்றியடைகின்றது. சிம்பு - கலாபவன்மணிக்கு நல்லாவே தண்ணிகாட்டுகிறார். விஜயகுமார் நடிப்பு பிரமாதம். அவர் பேசும் வசனங்கள் மனோகரா சிவாஜியின் மறுபதிப்பு. சாமியில் வந்து தூள் கிளப்பிய கோட்டா சீனிவாசராவ் சற்றுத் தெலுங்கைக் குறைத்திருக்கலாம். கருணாஸின் நகைச்சுவை படத்துக்குப் பலம். கலாபவன்மணி வில்லன் + குழந்தை தேவாவின் இசை வாரிசு ஸ்ரீகாந் நன்றாக இசையமைத்திருக்கிறார்.

குத்து நல்ல பன்ச்!

PNS.

## உல்லாச விண்வெளிப் பயணம்

ரஷ்யாவின் விண்கலமான சோயஸ் (Soyaz) - ஒவ்வொரு ஆண்டும் இருமுறை விண்வெளிப் பயணத்தை மேற்கொள்கின்றது. இது தனது பயணத்தின்போது பூமியைச் சுற்றிவரும் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் தொடர்புகளை மேற்கொள்கின்றது. சோயஸ் விண்கலம் 6 மாதத்துக்கொரு தடவை ரஷ்ய விண்தளத்திலிருந்து பிரயாணத்தை மேற்கொள்ளும்போது, 2 உல்லாசப் பிரயாணிகளையோ அல்லது ஐரோப்பிய விண்வெளி வீரர்களை அழைத்துச் செல்கின்றது. 20 மில்லியன் டொலர்கள் வழங்கி இந்தப் பிரயாணத்தை மேற்கொள்கின்றார்கள்.



இந்தத் திட்டத்தில் சில மாற்றங்களை மேற்கொள்வதற்கு விண்வெளி அமைப்பு திட்டமிட்டுள்ளது. விண்வெளிக்கு பிரயாணம் மேற்கொள்பவர்களை ஓராண்டுவரை விண்வெளி நிலையத்தில் வாழ்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் செவ்வாய், சந்திரன் ஆகிய கிரகங்களுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளன.

பிரயாணங்களுக்கு வேண்டிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கு அதிக நேரத்தை செலவிட முடியுமெனத் தெரிவித்துள்ளனர். அத்துடன் நீண்ட காலத்திற்கு விண்வெளியில் தங்கியிருக்கும்போது - மனிதனின் உடல், உளரீதியான மாற்றங்களையும் அவதானிக்க முடியுமெனவும் நாஸா விண் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

ரஷ்யாவைச் சேர்ந்த விண்வெளி வீரரான வலேரி பொல்யாகோ 14 மாதங்கள்வரை விண்வெளி ஆய்வுகூடத்தில் வாழ்ந்துள்ளார்.

## கொல்லப்படும் நீர்நாய்கள்

கனடாவில் 300,000 நீர் நாய்களை (SEAL) கொல்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. சர்வதேச சூழல் பாதுகாப்பு அமைப்பின் பிரதிநிதிகள் இத்திட்டத்திற்கு தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர். அத்துடன், மிருகவதைத் தடை அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.



சூழல் பாதுகாப்பை மேம்படுத்துவதாக கனேடிய அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். 25 ஆண்டுகளுக்கு முன் இவ்வகையான ஆர்ப்பாட்டங்களினால் நீர் நாய்களை அழிக்கும் திட்டத்தினை நிறுத்தியிருந்தது. நீர் நாய்கள் அவற்றின் இறைச்சிக்காகவும், தோலுக்காகவும் கொல்லப்பட்டு வந்துள்ளன. நீர் நாயின் தோலில் தைத்த ஆடைகளுக்குக் குளிர் நாடுகளில் வாழும் மக்களிடையே அதிக செல்வாக்குக் காணப்படுகிறது. கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நீர்நாயின் தோலில் தயாரித்த பொருட்களை, அமெரிக்கா 1972 ஆம் ஆண்டு நிறுத்தியிருந்தது. அத்துடன் ஐரோப்பிய ஒன்றியம் இந்தக் கொலைகளுக்கெதிராகச் சட்டநடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தன. நீர் நாய்களை வேட்டையாடுபவர்கள் - தடிகளினால் அடித்துக் கொல்லும்முறை முன்னர் மேற்கொள்ளப்பட்டது. இவ்வகைத் துன்புறுத்தல்களுக்குப் பலத்த எதிர்ப்பினை சூழல் பாதுகாப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனால், சுட்டுக்கொல்லும் செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

12 வயதிற்குட்பட்ட நீர் நாய்களின் வெள்ளை நிறமுடைய தோல் - ஆடை (FUR DRESS) தயாரிப்பவர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளது.


## இன்ரெல் கணினி



இன்ரெல் கணினி அமைப்புக்களான கையடக்கத் தொலைபேசி தற்போது நவீனமுறையில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. எல்லா கையடக்கத்தொலைபேசிகளும் இன்டநெற் வசதி கொண்டவையானாலும், இந்த முறை மூலம் காணப்படுகின்ற இன்ரநெற் மிகவும் வேகமான தன்மை - இதற்கு கொடுக்கப்படுகின்ற நவீனத்துவமாகும். எல்லாக் கையடக்க தொலைபேசிகளிலும் கமரா இருக்கின்றது. அதில் எடுக்கப்படுகின்ற படங்களை ஓரளவுக்கு மேல் பெருப்பிக்க முடியாது.

ஆனால், புதிய இன்ரெல் தொலைபேசி அமைப்பு எடுக்கப்படும் படங்களைத் துல்லியமான முறையில் மிகவும் பெருப்பிக்ககூடிய வசதியைத் தன்னகத்தே கொண்டது. இதிலே காணபபடுகின்ற இன்னுமொரு சிறப்பியல்பு இதிலே காணப்படுகின்ற டிவிடி அமைப்பாகும். இது சீடி மூலம் பார்க்கப்படுகின்ற படங்களை கையடக்கதொலைபேசியில் பெறக்கூடியதாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. தொலைக்காட்சித் திரையில் பார்ப்பதுபோன்றே நாங்கள் கையடக்கதொலைபேசித் திரையில் பார்க்கலாம். நொக்கியா மற்றும் எரிக்ஷன் ஆகிய நிறுவனங்கள் இன்ரெல் புதிய சிப்ஸ்களை வெளியிடுகின்றன.

## பென்சிலின்



ஸ்ரிப்றொகோகஷ் (Streptococcus) எனப்படும் கிருமியினால் தொண்டை நோ ஏற்படுகின்றது. இந்தநோயை கட்டுப்படுத்துவதற்குப் பென்சிலின் எனப்படும் மருந்து பாவிக்கப்படுகின்றது. இந்த மருந்திற்கு மாற்றாகப் புதிய மருந்தினைக் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்க பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் இந்தப் புதிய மருந்து பென்சிலினை விட, மூன்று மடங்கு சக்தி வாய்ந்ததென தெரிவித்துள்ளனர். மேலும் தொண்டை நோய் கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றவருக்குத் தொற்றிக்கொள்கின்றன. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'செப்பலோபொரின்' (CEPHALOSPORINS) எனப்படும் மருந்து பென்சிலினைப் போன்று செயற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பென்சிலினை உபயோகிக்கும்போது நோய் கிருமிகளுக்கு எதிரான தாக்குதிறன் (RESISTANCE) கொண்ட கிருமிகளை உருவாக்குகின்றது. ஆனால், புதிய மருந்து அவ்வாறு செயற்படுவதில்லை.

## பூனை ~ பழைய செல்லப்பிராணி

பூனைகளைச் செல்லப்பிராணியாக 95000 ஆண்டுகளுக்கு முன்னரே வளர்ந்துள்ளார்கள் என்ற உண்மையை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சைப்பிரஸிலுள்ள புதைகுழிகளில் மேற்கொண்ட ஆய்வுகள் தெரிவித்துள்ளன. இவை கற்காலத்தின் இறுதிப்பகுதியில் நடைபெற்றுள்ளன. மேலும் எகிப்தியர்கள் பூனைகளைச் செல்லப்பிராணிகளாக வளர்த்துள்ளதாகவும் பிரான்ஸ் ஆய்வாளர்கள் விஞ்ஞான சஞ்சிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளனர். இதேவேளை, மனிதர்களுக்கும் நாய்களுக்குமுள்ள தொடர்பு கி.மு.11000 ஆண்டுகளில் ஏற்பட்டதாகவும் தெரிவித்தனர்.



மனிதர்களின் புதைகுழிகளுக்கருகில் சிறிய புதைகுழிகளில் பூனைகள் புதைக்கப்பட்டிருந்ததையும், இருகுழிகளிலும் ஒரேவிதமான சமயச் சடங்குகள் நிகழ்த்தப்பட்டதையும் அவதானித்துள்ளனர். இதன்மூலம் இவைகள் ஒரேநேரத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் கருதுகின்றனர்.

கற்காலத்தின் இறுதிப் பகுதியில் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எலிகள் - தானியங்களை அழித்து வந்திருக்கலாம், இதனால் பூனைகளை வளர்த்துள்ளார்கள் எனவும் தெரிவித்தனர். எட்டு வயதுடைய பூனை ஒன்று உடல்பாகங்கள் துண்டுகளாக்கப்படாது, மனிதனின் புதைகுழிக்கருகில் புதைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை பூனையின் எலும்புகள் சில பிரதேசங்களில் எரியூட்டப்பட்டதையும் அவதானித்துள்ளனர். இதனால் பூனையின் இறைச்சியை உணவுத் தேவைகளுக்கும் பாவித்திருக்கலாம் எனவும் தெரிவிக்கின்றனர்.

அரசியல் - கனகரவி



(ஓமந்தை கொத்தணி வாக்களிப்பு நிலையத்திற்குப் படையெடுக்கும் மக்கள். உள்ளே : தன் வாக்கை அளிக்கும் பெண்மணி)

# உலகத்தின் வன்செவிக்கு மக்களின் உரத்த குரல்கள் எட்டுகின்றதா...?

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தமிழர் தாயகப் பிரதேசத்தில் தேசியத்தை மக்கள் மானசீகமாக ஏற்றுள்ளனர் என்ற செய்தியை அனைத்துலக சமூகத்திற்கும் எடுத்துக் காட்டியுள்ளது. நீண்டகாலமாக வாக்களிக்காமலிருந்த விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வாழ்ந்த மக்கள் - மிகவும் ஆர்வமாகவும், அக்கறையாகவும் இந்தத் தேர்தலில் வாக்களித்துள்ளனர். இவர்கள் வாக்களிக்க வந்த காட்சியை நேரில் பார்த்தபோது, தேர்த் திருவிழாவொன்றிற்கு மக்கள் வெள்ளமென திரண்டு வந்து கலந்துகொள்வது போலவே காணப்பட்டது. ஓமந்தையில் - கொத்தணி வாக்களிப்பு நிலையத்திற்கும் விளக்குவைத்தகுளம் படையினரின் சோதனைச்சாவடி அமைந்துள்ள இடத்திற்கும் இடையில், சுமார் மூன்று கிலோமீற்றர் இடைவெளி. இதனூடாக வாகனங்களில் மக்கள் செல்லக்கூடிய ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்த இடத்தில் பொலிஸாரினால், பேருந்துகளில் வரும் வாக்காளர்களின் தொகை கணக்கிடப்பட்டு, பொலிஸாரின் பாதுகாப்புடன் வாக்களிப்பு நிலையங்களிற்குச் செல்வதென ஒழுங்கு செய்யப்பட்டபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது, அதனால் தாம் செல்வது தாமதமாகும் எனக் கருதிய மக்கள். நடந்து போய் வாக்களிப்போம் என முடிவெடுத்தார்கள்.

இதன்போது மக்களை வாக்களிக்க அனுப்பும் ஒழுங்குகளைச் செய்தவர்களிற்கு அச்சமொன்று ஏற்பட்டது - மக்கள் குழம்புகின்றனர், இதனை சாதகமாக வைத்து இந்த மக்களின் வாக்களிப்பை தடுத்துவிடுவார்களோவென்று. எப்படியான சூழ்நிலையிலும் மக்களின் முடிவு ஒருமித்து செயல்வடிவம் பெறும்போது. அதனை எவராலும் தடுத்துவிட முடியாது. நேர்மைக்குப் புறம்பாகச் செயற்படடு மக்களை அடிமைகளாக வைத்திருக்க விரும்புகின்றவர்களுக்கு அல்லது அடிமைப்படுத்த விரும்புகிறவர்களுக்கு, அடிவருடிகளாக இருப்பவர்களுக்கு, மக்கள் சரியான நேரத்தில் பதிலடி கொடுப்பார்கள். இதற்கு நல்ல உதாரணமாக இந்தத் தேர்தலை மக்கள் ஒருமித்து பயன்படுத்தியுள்ளனர்.

வாக்களிக்க வந்த மக்கள் எவ்வளவு உணர்வுடன் வந்திருக்கின்றார்கள் என்பதனை தேர்தல் கண்காணிப்பு கடமையிலிருந்தவர்கள் நிச்சயம் புரிந்திருப்பார்கள் எனக் கூறலாம். வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் 'உலகத்தில்' எங்குமே இதுபோன்று மக்கள் ஆர்வமாக வந்து வாக்களித்த காட்சியை நாம் காணவில்லை என்று கூறினார்கள். முதல் நாளே வந்து தங்கிநின்று அதிகாலை வாக்களிப்பு நிலையத்திற்கு வந்து, தமது வாக்களிப்பு அவசியமானது என்று கருதி நடந்துகொண்டது வியப்பிற்குரிய ஒன்றாக உணரப்பட்டதை அனைத்துத் தரப்பினரிடமும் காணமுடிந்தது. இதில் என்ன வியப்புள்ளது என யாருக்காவது கேள்வியொன்று எழலாம். அவர்களிற்கான பதில் என்னவெனில்... அவயவங்களை இழந்தவர்களும், முதியவர்களும், குழந்தைப் பிள்ளைகளை உடையவர்களும் - சுமார் ஐம்பது, அறுபது கிலோ மீற்றருக்கப்பாலிருந்து வந்து இந்த வாக்களிப்பைச் செய்தது என்பதேயாகும்.

அத்துடன் இன்னுமொரு விடயத்தையும் நோக்கவேண்டும். பதினைந்தாண்டுகளுக்கு மேலாக வாக்களிக்காதவர்கள் மிகக்குறைவான அளவு நிராகரிக்கப்பட்ட வாக்குகள்தான் தந்தார்கள் என்பதேயாகும். அக்கறையுடனும், அவதானமாகவும் அவர்களின் வாக்களிப்பு அமைந்து விட்டதனால்தான், அவர்களின் வாக்குகள் நிராகரிப்பதுகூட சாத்தியமற்றதாக இருந்தது. ஏனைய கட்சிக்காரர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து அளிக்கப்படும் வாக்குகள் நிராகரிக்கப்படும் என நம்பினார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்பு வீணாகியது. அத்துடன், ஒட்டுமொத்தமாக மக்கள் தமிழ்த் தேசியத்தை ஆதரித்தனர். இதனை பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள்-தோற்றவர்கள் - இவ்வாக்களிப்பை 'ஆள் மாறாட்ட வாக்களிப்பு, முறைகேடான வாக்களிப்பு' என்றெல்லாம் குறைப்படுகின்றனர். இவர்கள் தமது குறைகளை மறைத்து குறை காண்பதில் முன்நிற்பதுகூட இவர்களின் குறைபாடாகவே தெரிகின்றது. ஆள்மாறாட்ட வாக்களிப்பு நடந்துள்ளதென ஒரு கதைக்கு எடுத்துக் கொண்டால். இப்படி குறைகூறுகின்றவர்களிற்கு மக்கள் வாக்களித்திருக்க வேண்டுமே! அது எவ்வாறுள்ளதென பார்க்கும்போது உண்மை சொல்லாமலே புரியும்.

சுயேட்சைக் குழு ஒன்றுக்கு யாழ். மாவட்டத்திலிருந்து ஒருதொகுதியில் நூற்றியெழுபத்தொரு வாக்குகளே கிடைத்தன. இது தான் இவர்களிற்கான வாக்கு வங்கியா? இத்தனை வாக்குகள்தான் லட்சக்கணக்கான மக்களிடமிருந்து - மக்களின் பிரதிநிதி பெறுகின்ற வாக்கு வீதமா? தம்மிலுள்ள குறைபாடென்ன? என்பதை உணராத வரையில் தோல்விகள் வரலாற்றுப் பதிவாகிவிடும். உணர்வுபூர்வமாக மக்கள் அளித்த வாக்குகளை கொச்சைப்படுத்தக் கூடாது. சிலபேரிற்கு கேலிகள் செய்ய மட்டுமே தெரியும். சிறார்கள் வாக்களித்தார்கள் - ஆள்மாறாட்ட வாக்களிப்பு - அது - இதென பொரிந்து தள்ளுகின்றவர்கள். போரிலும் சிறார்கள், அரசியலிலும் சிறார்கள். இதனைச் சொல்பவர்கள் இந்தப் போரினால் சிறார்கள் பாதிக்கப்படும் போது தலையை எங்கே புதைத்து வைத்திருந்தனரோ?

வாக்களிப்பென்பதை ஆயுதரீதியாக செயற்படுத்த முடியாது, ஒரு மனிதனுக்கும் இருக்கும் உரிமை. இது தனித்தெடுக்கும் முடிவு. இந்த முடிவை செயற்படுத்த எவரும் வற்புறுத்த முடியாது. சிலர் அபிவிருத்தி அது இதென வாக்குகளைப் பெறுவதற்கு கடும் முயற்சியெடுத்தார்கள். ஆனால் மக்கள் தமது எண்ணம் எவ்வாறானதென உலகத்திற்கு கோடிட்டுக் காண்பித்துள்ளனர். இது மக்களின் விருப்பார்வம். இதனை வற்புறுத்தி எவருக்கும் சார்பாக மாற்றி வாக்களிக்க வைக்க முடியாது. ஆகவே நிச்சயம் அனைத்துலக சமூகம் இது விடயத்தில் சரியான முடிவொன்றை எடுக்கும் என நம்புகின்றோம்.

மக்களின் உரிமை வெல்லப்பட வேண்டும். மக்கள் சுதந்திரமாக மகிழ்ச்சியாக வாழ வேண்டும். இதனைச் செய்துதரமுடியாதவர்கள் முதலைக்கண்ணீர் வடிப்பதை விடுத்து, மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றவர்களின் முடிவுக்காக காத்திருப்பது - பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்யும் மிக முக்கியமான சேவையாகவே தென்படுகின்றது. மக்களின் ஒட்டுமொத்த முடிவு மதிக்கப்பட வேண்டும். அதனையே மக்கள் விரும்புகின்றனர். தமக்கு நிவாரணம் தருபவர்களைப் பார்க்க, தம்மை பாதுகாக்க உயிரைக் கொடுக்க முன்வருபவர்களையே புனிதர்களாகப் பார்க்கின்றனர். உலகே உன் வன்செவிக்கு இது எட்டுகின்றதா...? *

மக்கள் முகம் - எஸ்.ஜெயா

# ஆரம்பத்தில் தடுக்கப்படாத வன்முறைகள் முடிவில் வேதனையைத் தந்துவிடுகின்றன

வரணிக் கிராமமானது அறுபது உள்ளக ஊர்ப் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசமாகும். இதுவரையில் அரசியல்வாதிகளை உற்பத்தி செய்யாத, ஆனால் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், விரிவுரையாளர்கள் எனப் பல கல்விமான்களை உற்பத்திசெய்த, உற்பத்தி செய்துகொண்டிருக்கின்ற ஒரு வளமான இயற்கை எழில் அமைவோடுகூடிய அமைதியான பண்பாட்டுக் கோலம் நிறைந்த ஊராகும்.

ஆனால், இன்று இங்கு நடைபெறுகின்ற வன்முறைக் கோலங்கள் அனைவரது பார்வையையும் வரணி நோக்கி நகர்த்திவிட்டதெனலாம். அண்மையில் நடைபெற்ற வன்முறையானது, தேர்தல் வன்முறையாக்க முனைந்தமையால், இது கொழும்பு அரசியல்வரை அடிபடும் அளவிற்குப் பிரபல்யம் பெற்றது.

எனவேதான், இத்தகைய பிரச்சினையின் பின்னணியையும் அதன் உற்பத்தித் தளத்தினையும் ஆராய்தல், உண்மை நிலையினைத் தெளிவுபடுத்தும். தேர்தலுக்கு மறுநாள் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவமே தேர்தல் வன்முறையாகப் பல பத்திரிகைகளில் சித்தரிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதுவோர் தனிநபர் சார்ந்த பிரச்சினை என்பதோடு, அந்தத் தனிநபரால் உருவாக்கப்பட்ட இரு கலகக்குழுக்கள் தம்முள் மோதிக்கொண்டதே இந்தப் பிரச்சினையின் உண்மையான தோற்றப்பாடாகும்.

இந்தத் தனி நபர் யார்?

இத்தகைய ஒரு வன்முறைக் களம் தோன்றுவதற்கு என்ன பின்னணி? என்பதே பலரின் தேடலாகும்.

இந்தத் தனிநபர் ஒரு 'கராத்தே' வீரர் என்பதுடன், பல போட்டிகளில் பங்குபற்றி பல விருதுகளையும் வென்ற ஒருவராவார். இதன் காரணமாக இவர் தனது திறமை பற்றி அளவுக்கதிகமான தற்பெருமை கொண்டிருந்ததோடு, தனக்கென ஒரு இளைஞர் குழுவைத் தன்னுடன் வைத்திருந்தார். இவரது நடத்தைக் கோலங்களில் ஏற்பட்ட முரண்பாடுகளால் (அடி, தடி, மது, மாது... என்பன) அந்த இளைஞர் குழு இவரைவிட்டு விலகிச்சென்றது.

இந்த நிலைப்பாடானது காலப்போக்கில் தலைமைத்துவம் சார்ந்த தனிநபருக்கும், ஏனைய இளைஞர் குழுக்களுக்கும் இடையே உள்ளக முரண்பாடுகளைத் தோற்றுவித்து, படிப்படியாக உறவுமுறையில் விரிசல் ஏற்பட வழிவகுத்தது. இதன் விளைவாக இந்த இளைஞர்குழு தமக்கென ஒரு விளையாட்டு அவையினை அமைத்துக்கொண்டு வரணியில் உள்ள அறுபது ஊர்ப் பிரிவுகளை உள்ளடக்கிய ஓர் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தத் தீர்மானித்தது. இதன் முதற்கட்டமாக - தம்பான், மசேரி, முத்தட்டு எனும் ஊர்களுக்கிடையே கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று நடைபெற்றது.

இந்தப் போட்டியின் வெற்றிதோல்வியில் இன்றைய பிரச்சினைக்குரிய தனிநபரின் தலையீடும், விமர்சனங்களும் தேவையற்ற விதத்தில் இடம்பெற்றதால், தேர்தல் தினத்தன்று மாலை குறித்த விளையாட்டுக் குழுவுக்கும் இந்தத் தனிநபருக்குமிடையில் பலத்த வாக்குவாதம் இடம்பெற்றது. இதனால், தனிநபரின் தலைமைத்துவத்திற்கும் விளையாட்டு இளைஞர் குழுவுக்குமிடையே பிளவு ஏற்பட்டது. இதனால், சீற்றமடைந்த தனிநபர் - தனக்கென ஓர் புதிய கலகக்குழுவை உருவாக்கி, இளைஞர்கள்மீது தாக்குதல் நடாத்தியமையே பிரச்சினைக்குக் கால்கோளிட்டது.

பிரச்சினையின் உற்பத்தி எங்கே? என்று நோக்கும்போது - வட வரணியிலுள்ள ஒரு சிற்றூரே காரணம் ஆகும். இந்த சிற்றூரானது சட்டவிரோதத் தொழில்களின் புகலிடமாகும். இங்கு சட்டவிரோத மதுபான விற்பனை வீட்டுக்குவீடு இடம்பெறுவதோடு, சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தியும் இங்கு தாராளமாக இடம்பெறுகின்றன. அத்தோடு இவ்வூர் சீவல் தொழிலில் ஈடுபடுபடும் சமூகத்தினை ஒட்டுமொத்தமாகக்கொண்டது.

இவ்வூரில் சட்டவிரோத மது அருந்தச் சென்ற இந்தத் தனிநபர் - மதுபோதை தலைகேற தனக்கென ஓர் கலகக் குழுவினை உருவாக்கி, பக்கத்து ஊரின்மீது தனது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார்.

கலகக்குழுவினர் தேர்தல் தினமன்று இரவு வீடு வீடாகச்சென்று, கேற்றில்நின்று தூசன வார்த்தைகளை ஏசியதுடன் சாதியவாதக் கருத்துக்களையும் கட்டவிழ்த்துவிட்டிருந்ததோடு, தேர்தல் முடிவுகளைப் பார்வையிட தொலைக்காட்சியினை கொண்டுசென்ற இளைஞர்குழுமீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் சீற்றம்கொண்ட இளைஞர்குழுவும் வன்முறைக்கும்பலும் இணைந்து மறுநாள காலை பழிவாங்கும் நோக்கோடு ஒருவரை வாளால் வெட்டி காயப்படுத்தியுள்ளது. இதுவே வரணி வன்முறையின் உண்மை நிலையாகும்.

ஆனால் இதனைத் தேர்தல் வன்முறையாக ஊடகங்கள் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். சொந்த விடயங்கள் தேர்தல் வன்முறையாக மாற்றப்பட்டதற்குக் காரணமாக அமைந்தது யாது? இதன் பின்னணி என்ன? உழுத்துப்போன அரசியல்வாதிகளா? அல்லது அரச நிர்வாகங்களில் உயர் பதவிகளைப் பெறமுனையும் பொலிஸ் அதிகாரிகளின் நடவடிக்கையா? அல்லது சொந்த விடயங்களைத் தேர்தல் வன்முறையாகக்காட்டி நிவாரணம்பெற முயற்சிப்பவரின் முயற்சியா? என்பது சட்டரீதியான நிறுவனங்கள் ஆராய வேண்டிய உண்மையாகும்.

இத்தகைய உள்ளூர் கலகமானது தேர்தல் வன்முறையாக முலாம் பூசப்பட்டு, ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டமையினால் வரணி வடக்கிலுள்ள தம்பான்- கறுக்காய் எனும் இரு ஊர்களும் பெருமளவான இராணுவ வீரர்களைக் கொண்டு பலப்படுத்தப்பட்டதோடு, கறுக்காயில் தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு, பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டமையினால் இவ்வூர் மக்களிடையே ஓர் இனம்புரியாத பதட்டநிலை ஒன்று உருவாகியது. இத்கைய ஓர் நிலையினை சாதகமாகப பயன்படுத்த முனைந்த சில குழுக்கள் கிடப்பில் போடப்பட்ட சாதியவாதக் கருத்துக்களை முன்னிறுத்தி, பிரச்சினைகளை ஊதிப்பெருக்க முயற்சித்தமை மிகவும் வேதனைக்குரிய ஒரு செயலாகும்.

இவ்வாறு வரணியில் வன்முறைகள் தொடர்வதற்குக் காரணம் சட்டரீதியான அணுகுமுறைகள் சரியாகக் கையாளப்படாமையே ஆகும். பெரும்பாலான சட்ட அணுகுமுறைகள் வன்முறையின் முடிவிடங்களையே தமது தீர்ப்புக்குரிய ஆய்வுப்பகுதியாகக் கொள்கின்றன. இத்தகைய முறையிலுள்ள குறைபாடே மீண்டும் மீண்டும் வன்முறைகள் தோற்றம்பெற வழிவகுக்கின்றன.

வன்முறையினை நாம் சீர்படுத்த முனைகின்றபோது, வன்முறையின் தோற்ற இடமும் அதன் ஆணிவேர்க் காரணமும் கண்டறியப்பட்டு, அதனூடாக அணுகுகின்றபோதே சரியான உண்மையான தீர்வைப் பெறமுடியும்.

இதற்காக வன்முறை தொடர்பாகக் கைதுசெய்யப்படுவோர் உளமருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கையினைப் பெறுவதோடு, கைது செய்யப்பட்டவர்கள் சரியானமுறையில் சரியானவர்கள்தான் கைதாகி உள்ளனரா? என்பதை அறிய புலனாய்வு அறிக்கைளைப் பெறுதலும் முக்கியமானதாகும்.

ஏனெனில், தவறு செய்யாத ஒருவர் சிறையில் அடைக்கப்படுகின்றபோது அவரின் உளநிலையில் பாதிப்புத் தோன்றி, அது நாளடைவில் வன்முறைக்கு வித்திட வழிவகுக்கிறது. இதற்குப் பிரதான காரணமாக அமைவது கைதி பற்றி சமூகத்தின் தவறான பார்வையாகும். இதுவே கடந்த காலத்திலிருந்து இன்றுவரை இடம்பெறும் வன்முறைகள் எடுத்துக்காட்டுகின்றன. இதற்குக் காரணமாகப் பொலிஸாரின் பக்கச்சார்பான நடவடிக்கைகளும் அரசியல் அழுத்த நிலைப்பாடுகளும் அமைகின்றன.

வரணியில் ஏற்படும் வன்முறைகள் பற்றி பல பத்திரிகைகளில் முன்னரே வெளிப்படுத்தப்பட்டபோதும், இதில் சிலவற்றினை இங்கு பார்ப்பது பொருத்தமானதாகும்.

1. வடவரணியில் ஹயஸ் வாகனச் சாரதி மதுபோதையில் நின்ற இளைஞர்களால் மறித்துத் தாக்கப்பட்டமை (தீபாவளி தினத்தன்று).

2. வரணி - இயற்றாலையில் விளக்கு ஒளியில் கல்விகற்ற மாணவர்கள் வன்முறைக் கும்பலால் தாக்கப்பட்டமை.

3. வரணி - தாவளை இயற்றாலையில் இரு மாணவர்குழுக்கள் - வன்முறைக் குழுக்களின் உதவியுடன் வாள்வெட்டில் ஈடுபடடமை.

4. வரணி - கறுக்காய் கலகக்குழுக்கள் தம்பான் இளைஞர் குழுக்கள்மீது தாக்கியமை.

5. தம்பான் வன்முறைகுழு - கறுக்காய் மீது படையெடுத்து வாள்வீச்சில் ஈடுபட்டமை.

இத்தகைய சம்பவம் தொடர்பாக நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நிரபராதியா? குற்றவாளியா? என்பதனை சட்டம்தான் தீர்மானிக்கவேண்டும்.

ஆனால், இத்தகைய குழுக்கள் தோன்றவும் எழுச்சிபெறவும் யார் காரணம்? சமூகமா? பெற்றோரா? என்பது தேடலுக்குரிய விடயமாகும். அத்தோடு, இத்தகைய கலகக் குழுக்கள் அல்லது வன்முறைக்கும்பல்கள் இயங்குவதற்கு யாதும் பின்னணிகள் உண்டா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

மேலும் இப்பிரச்சினை தொடர்பாக வரணி வடக்கு (J/339) கிராம சேவகரை அணுகிய போது, இவை தொடர்பான எந்த முறைப்பாடும் தம்மிடம் பதிவுசெய்யப்படவில்லை எனக் கூறுகின்றார். ஓர் ஊரில் மரணம், பிறப்பு, திருமணம், திருட்டு, கலகம் தொடர்பான முறைப்பாடுகள் அவ்வூர் கிராமசேவகருக்கு வெளிப்படுத்தப்படவேண்டியது முக்கியமான தொன்றாக அமைவதோடு, அவருடைய நாட்குறிப்பேட்டில் இத்தகைய பதிவுகள் முக்கிய சாட்சியாக ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றாகும்.

ஆனால், இத்தகைய ஏற்பாடுகள் ஏது மற்று, உள்ளக முரண்பாடுகளை அரசியல் முலாம் பூசி தேர்தல் வன்முறையாகக் காட்ட முனைந்தமை எத்தகைய உள்நோக்கத்தினடிப்படையில் என மக்கள் சந்தேகம் எழுப்புகின்றனர்.

இதற்குக் யார் காரணம்? ஊழல் நிறைந்த பொலிஸ்துறை இதற்கு வளைத்தெடுக்கப்பட்டதா? அல்லது உழுத்துப்போன அரசியல்வாதிகள் இதற்கு வக்காளத்து வாங்கினரா? இது சம்பந்தப்பட்டவர்களுக்குச் சமர்ப்பணம். வன்முறைகள் என்றும் கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். ☆

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## அரசின் பலவீனமும் இனவாதிகளின் பலமும்

தற்போது நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமது பாரம்பரிய அரசியல் எதிரிகளும் கொள்கையடிப்படையில் முரண்பட்டவர்களுமான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான பொதுஜனஐக்கிய முன்னணியுடன் கூட டுச்சேர்ந்து ஒரு அரசியல் சந்தர்ப்பவாதக் கூட்டணியை அமைத்துக் கொண்டதன்மூலம், இலங்கையின் மூன்றாவது பெரிய அரசியல் சக்தியாக மட்டுமல்ல, புதிய அரசினை ஆட்டிப்படைக்கும் மேலாதிக்க சக்தியாகவும் ஜே.வி.பி.யினர் தம்மை நிலைநிறுத்திக் கொண்டுள்ளனர்.

இதே போன்று தான் இதற்கு முன்னர் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் சிஹல உறுமய என்ற பெயரில் போட்டியிட்டு, தென்பகுதி மக்களால் அதிகளவு கவனத்திலெடுக்கப்படாது ஒற்றை ஆசனப்பிரதிநிதித்து வத்தை மட்டும் கொண்டதாக விளங்கிய, பூரண பௌத்த சிங்கள இனவெறிக்கட்சியினர் இம்முறை புத்தபிக்குமாரை தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய என்ற பெயரில் நிற்கவைத்து ஒன்பதுஇருக்கைகளை வென்றதுடன் மற்றொரு ஆட்டிப்படைக்கும் சக்தியாகவும் மாறியுள்ளனர்.

இந்த இரு கட்சிகளினதும் ஆதரவின்றி ஆட்சியமைக்க முடியாத நிலையிலுள்ள அரசு - இவ்விரு அணிகளின் தேவைகள், கோரிக்கைகள், நிபந்தனைகள் கட்டளைகள் என அனைத்தையுமே நிராகரிக்க முடியாத வலுவற்ற நிலையிலேயே இன்று அல்லாடிக்கொண்டுள்ளது.

இரு தரப்போடும் முரண்படும் விடயங்களில் இணக்கம் காண அரசு கடினமாக முயன்றாலும்கூட இந்த முயற்சிகள் எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்று இபபோதைக்கு உறுதி கூறவேமுடியாது. அப்படி ஓர் இணக்கம் ஏற்பட்டாலும் அது நிரந்தரமான தாக அமையுமா என்பது சந்தேகமே...

இரு பௌத்த அடிப்படைவாத பேரினவாத கட்சிகளின் ஆதரவை நம்பி மட்டுமே அமையும் அரசால் அவர்களின் நிபந்தனைகளுக்கமைய சமாதான முன்னெடுப்புக்களை நகர்த்த முடியுமா என்பது அதைவிடச்சந்தேகமே...

அப்படி ஒரு பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தாலும் அதன் மூலம் உறுதியானதோர் அரசியல் தீர்வு எட்டப்படுமா என்பது எல்லாவற்றையும்விட கேள்விக்குறியான விடயமே...

அரசின் அதிகாரப்பரவலாக்கலையே நிராகரிக்கும் ஜே.வி.பியும் கருணாவுக்கு எதிரான நடவடிக்கையை தடுக்க முன்வராது பேசாமல் இருந்த ஜனாதிபதி மன்னிக்க முடியாத குற்றம் செய்துள்ளார் எனச்சீறும் சிஹல உறுமயவும், இந்தப் புதிய அரசினை மேலும் இனவாதப் போக்கில் அமைதிக்கும் சமாதானத்திற்கும் எதிராக மட்டுமே செயற்பட உதவும் என்பது தெளிவு.


இது இந்த அரசின் ஆயுளை குறுகியதாக்கவே செய் யும் என்பதால், அரசின் செயற்பாடுகள் எப்படி நகர்வுகளை மேற்கொள்ளவைக்கும் என்பதை சர்வதேச சமூகம் கூர்மையாக அவதானித்து வருகிறது.

இலங்கை அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மற்றும் குழப்பங்கள் அனைத்திற்கும் காரணமான பிரதான சக்திகளாக தோற்றங்கொண்டு, பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தி வரும் ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் - எதிர்கால இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும், அமைதியை உறுதிப்படுத்த வேண்டிய சமாதான சூழ்நிலைக்கும் மாபெரும் அபாயததை உண்டு பண்ணக்கூடிய அச்சுறுத்தல்களுக்கான நச்சு மூலங்களாக தம்மை இனங்காண வைத்துள்ளன.

இவற்றுள் ஜே.வி.பியினரின் இறந்த காலச் செயற்பாடுகள் குறித்து எவருக்கும் விளக்கிக் கூறவேண்டிய அவசியமேயில்லை. இடதுசாரிக் கொள்கைகளின் அடிப்படையில், ஆயுதந்தாங்கிய வர்க்கப்புரட்சி ஒன்றை மேற்கொள்வதன் மூலம், ஒரு சமதர்ம அரசை நிர்மானிக்கும் நோக்குடன் தமது அரசியல் நடவடிக்கைகளை 1970 களின் ஆரம் பத்திலேயே முனைப்புடன் தொடங்கிய ஜே.வி.பியினர், பின்னர் 1971 ஏப்ரல் கிளர்ச்சியை தொலைநோக்கு சிந்தனையற்ற வகையில் ஆரம்பித்து அப்போதைய அரசால் பேரழிவைச் சந்தித்ததன் பின்னர், 1977 இல் அரசியலில் மீள்வருகையொன்றை மேற்கொண்டதுடன் 1987 இன் இறுதிப் பகுதியில் இலங்கையில் நிலைகொண் டிருந்த இந்தியப்படைகளுக்கு எதிராகவும், அப்போதைய பிரேமதாசாவின் தலைமையிலான அரசுக்கு எதிராகவும் மற்றொரு கிளர்ச்சியை எந்தவகையிலும் மறக்கவோ, மன்னிக்கவோ முடியாத ஈவிரக்கமற்ற அராஜக நடவடிக்கைகள்மூலம், அரங்கேற்ற முனைந்து இறுதியில் படுமோசமான அழிவுகளை சந்தித்ததுடன், தனது தலைமைப் பீடத்தையும் அழிவுக்குள்ளாக்கிக்கொண்டது.

இதன் பின்னர் மண்டும், இந்த முன்னாள் செஞ்சட்டை கிளர்ச்சியாளர்களின் புரட்சிக்கோஷங்கள் வரட்சிகண்டதையடுத்து நாடாளுமன்ற அரசியலிலுள், அதாவது இலங்கையின் பேரினவாத ஜனநாயக நீரோட்டத்தினுள் புதிய முகங்களுடனும், புதிய கோஷங்களுடனும் தம்மை இணைந்துக் கொணடனர்.

1970 களில் ஜனநாயக சமதர்ம அரசியல் சித்தாந்தம் பேசியவர்கள் 1990 களின் இறுதியில் பேரினவாத ஜனநாயகவாதிகளாகி, சந்தர்ப்பவாத அரசியலுள் வேஷம் மாறிக் கொண்டவர். இதனைத் தொடர்ந்து கடந்த ஒரு தசாப்த காலப்பகுதிக்குள் நாடாளுமன்ற அரசியலில் தம்மை ஸ்திரப் படுத்திக் கொள்ள படிப்படியாக முயன்று, கடந்த - அதாவது 2000 ஆம் ஆண்டுத் தேர்தலில் தம்மை ஓர் வலுவான அரசியல் சக்தியாக மாற்றிக் கொள்வதில் கணிசமான வெற்றியையும் பெற்றனர்.




### சட்டவிரோதமாக வெளிநாடு செல்வோரை தடுக்க

# சர்வதேச பொலிஸ்படையுடன் இலங்கைப் பொலிஸும் பணியில்

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்பவர்களைத் தடுப்பதற்கு - சர்வதேச பொலிஸ் படை (இன்ரபோல்) இலங்கைப் பொலிஸுடன் இணைந்து பணியாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இலங்கைப் பொலிஸ் பேச்சாளர் தெரிவிக்கையில் -

வறிய இளைஞர்கள் பலர் சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முயற்சி செய்கின்றார்கள். இதற்காக அவர்கள் முகவர்களுக்கு இரண்டு தொடக்கம் நான்கு லட்சம் வரையான பணத்தைக் கொடுக்கின்றார்கள்.

இவ்வாறு இவர்கள் சட்டவிரோதமாக செல்லும்போது, பிடிபட்டால் நேரடியாகவே சிறைக்கு அனுப்படுகின்றனர். இதனால், அவர்கள் முகவர்களிடம் கட்டிய பணத்தையும் இழப்பதோடு தமது சுதந்திரத்தையும் இழக்கின்றனர்.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்பவர்களைக் கையாள்வதற்கு - குற்றப்புலனாய்வுப் பணியகம் பிரத்தியேகமாக ஒரு அலுவலகத்தை விசேடமாக நிறுவியுள்ளது எனவும் தெரிவித்தார்.

அண்மையில்கூட இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் சென்று, திருப்பியனுப்பட்ட 269 பேருக்கு - ஐம்பதினாயிரம் ரூபா தண்டமும, ஒருவருட சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடமேல் மாகாண தேர்தலுக்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிப்பு

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமேல் மாகாணசபை தேர்தலை முன்னிட்டு, விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பொலிஸ்மா அதிபர் - தேர்தல் நடைபெறவுள்ள பகுதிகளில் பொலிஸ் அதிகாரிகள் சிவில் உடையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் வன்முறைகள் இடம்பெறுவதாலேயே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்தமுறை இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலின் போது, வடமேல் மாகாணத்திலேயே அதிகளவிலான தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இதனால் வன்முறைகளைத் தடுக்கும் வகையிலேயே இம்முறை பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வடமேல் மாகாணத்தில் கடமையில் ஈடுபடுததப்பட்டுள்ள பொலிஸாருடன், மேலும் இரண்டாயிரத்திறகும் அதிகமான பொலிஸார சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

# பவுல்பொயின்ற் கடற்பகுதியில் நான்குபேர் கடற்படையினரால் கைது

திருகோணமலை பவுல் பொயின்ற கடற்பகுதியில் கண்ணாடி இழைப் படகுடனிருந்த நான்கு பேரை சந்தேகத்தின் பேரில் கடற்படையினர் கைதுசெய்துள்ளதாகப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமையன்று இடம்பெற்றது. இந்த நால்வரையும் கைதுசெய்த படையினர், அவர்களது படகினை சோதனையிட்டபோது 99 ஜெலிக்னைட்டுகளை படகில் இருந்து கண்டுடெடுத்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நால்வரும், 99 ஜெலிக்னைட்டுகளும் மற்றும் அவர்களது படகும் கடற்படையினரால் திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. துறைமுகப் பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேறகொண்டு வருகின்றனர்.

# கருணா கைவிட்டுச் சென்றுள்ள ஆயுதங்களை எடுக்கவேண்டாம்

### புலிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

கிழக்குப் பகுதி மக்களுக்கு கருணாவால் கைவிடப்பட்ட ஆயுத தளபாடங்களை எடுக்கவேண்டாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கருணாவினால் கைவிடப்பட்ட பொருட்களும், இராணுவ தளபாடங்களும் தனியாருக்குச் சொந்தமானதல்ல. இதனால், அதை யாரும் தமக்குரிமையாக்கவேண்டாம் எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பொருட்களும், இராணுவ தளபாடங்களும் வெறும் பணத்தால் கொள்வனவு செய்யப்பட்டதன்று. அவை வேர்வையையும் இரத்ததையும் கொட்டியே வாங்கப்பட்டது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# ரத்னசிறி விக்கிரமநாயக்க, அனுருத்த ஆகியோரின் மனுமீதான விசாரணை மே 17 இற்கு ஒத்திவைப்பு

தேசியப் பட்டியலில் இடம்பெறாதவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிப்பதைத் தடைசெய்யுமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணை - அடுத்தமாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியலில் இடம்பெறாத முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இதனைத் தடுக்கும் வகையிலான உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரியே மாற்றுக்கொள்ளைக்கான இயக்கம் இந்த மனுவினைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த மனுவினைப் பரிசீலித்த நீதியரசர்களான அன்ரூ சோமவன்ச, எஸ்.ஐ.இமாம் ஆகியோர் மனுமீதான விசாரணையை அடுத்த மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை - மாதிரி வினாத்தாள்

## வணிகக் கல்வி - பகுதி I

## ஒரு மணித்தியாலம்

1) பின்வருவனவற்றில் மூன்றாம் நிலை உற்பத்தி என்பதனுள் அடக்கப்படுவது?
   1) விவசாயம் 2) சுரங்கத் தொழில் 3) தயாரிப்புத் தொழில்
   4) கட்டடவாக்கம் 5) வர்த்தகம்

2) ஒரு செயற்கையான வணிக வளமாகக் கருதக்கூடியது?
   1) நிலம் 2) உழைப்பு 3) மூலதனம்
   4) முயற்சி 5) வெளியீடுகள்

3) தற்காலத்தில் பல்தேசியக் கம்பனிக்குப் பதிலாக நிறுவப்பட்டுவரும் அமைப்பு எது?
   1) ஒரு தனிவியாபாரம் 2) ஒரு பங்குடமை 3) ஒரு அங்கீகாரம் பெற்ற வணிகம்
   4) ஒரு உள்ளூராட்சி மன்றம் 5) ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி

4) வரையறுத்த தனியார் கம்பனி, வரையறுத்த பொதுக்கம்பனி என்பவற்றுக்கிடையிலான பிரதான வேறுபாடுகளாக அமைவது?
   1) பங்கு முதல் 2) பங்கு கைமாற்றல் 3) கம்பனிச்சட்டம்
   4) வரையறுத்த பொறுப்பு 5) சட்ட ஆளுமை

5) வரையறுத்த சொந்தக் கம்பனி தொடர்பாக பின்வருவனவற்றில் பொருத்தமற்ற ஒன்று எது?
   1) இயக்குநர்களின் சபை முகாமையாளர்களால் நியமிக்கப்படும்.
   2) இரண்டிற்குக் குறையாத பங்குதாரர்கள் இருப்பர்.
   3) ஒரு இயக்குநரேனும் காணப்படவேண்டும்.
   4) பங்குகளைக் கைமாற்றம் செய்யக் கட்டுப்பாடு உண்டு
   5) பங்குதாரர்களுடைய பொறுப்பு வரையறுக்கப்பட்டது.

6) ஒரு வியாபாரத்தின் வளர்ச்சியில் அதிகம் செல்வாக்குச் செலுத்துபவர் யார்?
   1) உரிமையாளர் 2) தொழிலாளர்கள் 3) அரசு
   4) நுகர்வோர் 5) சமூகம்

7) உற்பத்தி நிறுவனங்களுக்கான மூலப்பொருள் பற்றாக்குறை பின்வருவனவற்றில் எதைக்காட்டும்?
   1) மக்கள் சூழல் 2) இயற்கைச் சூழல் 3) சட்டச் சூழல்
   4) தொழில்நுட்பச் சூழல் 5) அகச் சூழல்

8) ஒரு பொதுக் கம்பனியின் இலக்கு, குறிக்கோள் என்பவற்றை வெளிக்கொணர்வது?
   1) அமைப்பக விதி 2) அமைப்புப் புறவிதி 3) முன்விபரணம்
   4) சட்டமுறை அறிக்கை 5) தனிப்பட்ட கடிதம்

9) தனியார் வணிகம் அரச வணிகத்திலிருந்து வேறுபடக்கூடிய ஒரு முறை எது?
   1) உடமை 2) சட்ட ஆளுமை 3) வாழ்வு
   4) பதிவு 5) பொறுப்பு

10) பின்வருவனவற்றில் எது தனியார் மயமாக்கலின் நோக்கமாகும்?
   1) செயற்திறனை அதிகரித்தல்
   2) நுகர்வோர் திருப்தியை அதிகரித்தல்
   3) முதலீட்டு அதிகரிப்பு
   4) அரச திறைசேரி நிதியிடலைக் குறைத்தல்
   5) மேற்சொன்ன அனைத்தும் சரி

11) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் பணியாகக் கருதப்பட முடியாதது எது?
   1) சங்கத்தைப் பதிவு செய்தல்.
   2) கணக்காய்வு செய்தல்
   3) கூட்டுறவுச் சட்டத்தை அமுலாக்கல்
   4) அரச கொள்கைகளை அமுல்படுத்தல்
   5) கூட்டுறவு அமைப்புக்களிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தல்


12) அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் இயக்குநர்களை நியமனம் செய்வதில் அதிகம் செல்வாக்குச் செலுத்துபவர்?
   1) பொறுப்பான அமைச்சர் 2) உலகவங்கி 3) பாராளுமன்றம்
   4) அரச திறைசேரி 5) கணக்காய்வாளர் நாயகம்

13) நேரில் உற்பத்தி தோன்றுவதற்கு வழிவகுத்த காரணி எது?
   1) பாரிய தோற்றம் 2) கவர்ச்சித் தன்மை 3) இயந்திரப் பாவனை
   4) சிறப்புத் தேர்ச்சி 5) அரச ஆதரவு

14) பணத்தின் சட்ட ஏற்புத்தன்மையைக் காட்டுபவை?
   1) நாணயங்கள் 2) காசோலைகள் 3) கடனட்டைகள்
   4) வரவு அட்டைகள் 5) மாற்றுண்டியல்கள்

15) கடனட்டைப் பாவனையால் வியாபார நிறுவனத்திற்குக் கிடைக்கக்கூடிய நன்மையல்லாதது.
   1) புரள்வு அதிகரிக்கும் 2) வாடிக்கையாளர் அதிகரிப்பர்
   3) விளம்பரம் ஏற்படல் 4) அங்கத்துவக் கட்டணத்தைப்பெறல்
   5) இலாபம் அதிகரிக்கும்

16) காசோலையைப் பெற்றுக்கொண்டவர் இன்னொருவருக்குக் கைமாற்ற முடியாத நிலையில் உள்ள குறுக்குக் கோட்டைக் கொண்ட காசோலை வகை எது?




17) மத்திய வங்கியின் பண்புசார் கட்டுப்பாட்டுக் கருவியாகக் கருதக்கூடியது?
   1) வங்கிவீதம் 2) கடனுக்கான வட்டிவீதம்
   3) சட்டப்படியான ஒதுக்கு வீதம் 4) திறந்த சந்தையில் விற்பனை
   5) மேற்சொன்ன எவையுமல்ல

18) பின்வரும் சேவைகளில் எது சுற்றுலாச் சேவையில் அடக்கப்படக்கூடியது.
   1) திரைப்படம் 2) நாடகம் 3) விளையாட்டு
   4) சங்கீதம் 5) ஹோட்டல்

19) பின்வருவனவற்றில் அண்மிய பணமாக கொள்ளமுடியாதது?
   1) காசோலைகள் 2) மாற்றுண்டியல்கள் 3) திறைசேரி உண்டியல்கள்
   4) திறைசேரிப்பிணைகள் 5) சேமிப்புச்சான்றிதழ்கள்

20) பின்வருவனவற்றில் எதில் முதலீடு செய்பவர் முதலீட்டு வருமானத்தை இழக்காது பெறுவதற்கான உரித்துக் கூடியவர்?
   1) சாதாரண பங்கு 2) திரள் முன்னுரிமைப்பங்கு
   3) திரளா முன்னுரிமைப்பங்கு 4) மீட்கத்தக்க முன்னுரிமைப்பங்கு
   5) வாக்குரிமையற்றபங்கு

21) இலங்கை முதலீட்டுச் சபையினால் இலங்கையர்களுக்கு மட்டும் ஒதுக்கப்படாத முதலீட்டுத் துறை எது?
   1) கடன்வழங்குதல் 2) அடகு பிடித்தல் 3) கரையோர மீன்பிடி
   4) 1 மில்லியன் அமெரிக்க டொலருக்கு குறைந்த மூலதனம் கொண்ட வியாபாரம்
   5) 10 மில்லியன் அமெரிக்க டொலருக்கு குறையாத மூலதனம் கொண்ட வியாபாரம்

22) பொதுத்துறையின் கீழ் சில நிறுவனங்கள் நடத்தப்படுவதற்கான காரணங்களாகக் கூற முடியாதது?
   1) அரசியற் காரணம் 2) தேசத்தைப் பாதுகாத்தல்
   3) தனியுரிமையைக் கட்டுப்படுத்துதல் 4) உரிமையை விரிவாக்கல்
   5) சமூகசேவை

23) ஒருவர் வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்றில் ஒவ்வொன்றும் ரூபா 10 பெறுமதியான 100 பங்குகளை ஒவ்வொன்றும் ரூபா 80 வீதம் 2003 ஜனவரி 1 இல் கொள்வனவு செய்தார். இந்தக் குறிப்பிட்ட வருட முடிவில் கம்பனி 30 % பங்குலாபமாக வழங்கியது. 2003 டிசம்பர் 31 இல் கம்பனியின் பங்குகள் ரூபா 90 ஆக அதிகரித்துள்ளது. இந்தக் குறிப்பிட்ட வருட முடிவில் முதலீட்டின் மீதான மொத்த திரும்பல் யாது?
   1) ரூபா 1000 2) ரூபா 1300 3) ரூபா 2400
   4) ரூபா 3400 5) ரூபா 4300

24) தகவல்களை கணினியில் ஒழுங்குபடுத்திச் சேகரித்து வைத்து தேவையானபோது வழங்கும் முறை?
   1) தகவல் தளம் 2) பரம்பல் தாள் 3) உயர்தரத்திலான புத்தக சஞ்சிகை
   4) மென்பாகம் 5) வன்பாகம்

25) பின்வருவனவற்றில் மத்திய வங்கியின் பணியல்லாதது?
   1) நாணய வெளியீடு 2) அரசுக்குக் கடன் வழங்கல்
   3) காசோலைத் தீர்ப்பனவு 4) கடன் கட்டுப்பாடு
   5) அரச பிரதிநிதித்துவம்

26) போக்குவரத்தின் அடிப்படை அம்சமாகக் கருதமுடியாதது?
   1) ஊடகம் 2) வழி 3) சக்தி
   4) தரிப்பிடம் 5) நியமம்

27) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அமைக்கப்பட்டது?
   1) வீதிகளைச் செப்பனிட 2) வாகன உரிமைப்பதிவுகளைப் பேண
   3) பயணிகளுக்குச் சிறந்த பயணவசதியாற்ற 4) அரசுக்கு உதவுதல்
   5) மேற்கூறிய அனைத்துக்கும்

28) தொடர்பாடல் ஊடகம் ஒன்றை தெரிவுசெய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய அவசியமற்ற காரணி எது
   1) செலவு 2) சுருக்கம் 3) கிடைக்கும் தன்மை
   4) பாதுகாப்பு 5) தூரம்

29) இறக்குமதி செய்யப்படும் தயாரிக்கப்பட்ட ஆடைகளை துறைமுகப்பகுதிக்கான கட்டணங்கள் செலுத்தி அப்புறப்படுத்தும்வரை எங்கு பாதுகாத்து வைக்கலாம்?
   1) பந்தித்த பண்டகசாலை 2) சுங்கத்தீர்வையற்ற பண்டகசாலை
   3) இராணியின் பண்டகசாலை 4) இறக்குமதியாளரின் சொந்தக்களஞ்சியம்
   5) களஞ்சியப்படுத்த வேண்டியதில்லை

30) ஒரே கட்டடத்தில் ஒவ்வொரு வகையான பொருட்களையும் வெவ்வேறு பகுதிகளில் வைத்து விற்பனை செய்வது
   1) பல்பொருட்கடை 2) பகுதிக்கடை 3) சிறப்புக்கடை
   4) தொடர்களஞ்சியக்கடை 5) சுயசேவைக்கடை

31) "3% - 10 தேறியது 30 நாட்கள்" எனக் குறிப்பிடுவது
   1) கணியக்கழிவு 2) காசுக்கழிவு 3) வியாபாரக்கழிவு
   4) பருவகாலக்கழிவு 5) அன்பளிப்பு

32) ஏற்றுமதியில் பொருளின் விலை போக்குவரத்துக் கட்ணம் துறைமுகக் கட்டணம் கப்பலில் ஏற்றுவதற்குரிய கட்டணம் என்பவை அடங்கிய விலை.
   1) இருந்த இடத்து விலை 2) இலவச விலை 3) விலையும்கேள்வியும்
   4) கப்பல் தளம் மட்டும் இலவச விலை
   5) கப்பலுக்கு வெளியே மடடும் இலவசம்

33) 2002 இல் ஆண்டு அறிக்கையின்படி இலங்கைக்கு எந்த நாட்டில் இருந்து அதிகம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.
   1) இந்தியா 2) இங்கிலாந்து 3) ஜேர்மனி
   4) பிரான்ஸ் 5) ஜப்பான்

34) புதிய வணிகம் ஒன்றை அமைக்கும்போது வணிக ஒழுங்கமைப்பு வகையொன்றைத் தெரிவுசெய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய அவசியமற்ற காரணி எது?
   1) வியாபாரத்தின் இயல்பு 2) தேவைப்படும் மூலதன அளவு 3) சட்டத்தேவை
   4) சந்தைப்பங்கு 5) அபாயத்தின் இயல்பு

35) பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கீழ் தொழிற்படாதது எது?
   1) பங்குத்தரகர் 2) பங்குவர்த்தகர் 3) மத்தியவைப்பகக் கம்பனி
   4) அலகுப்பொறுப்பு 5) நிதிக்கம்பனி

36) மூலதனச்சந்தையில் ஈடுபடுபவராக கருதப்பட முடியாதவர்.
   1) வங்கிகள் 2) அரசாங்கம் 3) கம்பனிகள்
   4) பணத்தரகர்கள் 5) பங்குத்தரகர்கள்

37) ரூபா 12 இலட்சம் பெறுமதியான லொறி ரூபா 10 இலட்சத்திற்கு முழுப்பொறுப்படைய காப்புறுதி செய்யப்பட்டது. அது பயணம்செய்கையில் சாரதியின் கவனக்குறைவு காரணமாக விபத்துக்குள்ளாகி ஏற்பட்ட சேதம் ரூபா 300 000 என மதிப்பிடப்பட்டது. லொறியின் உரிமையாளருக்குக் காப்புறுதி நிறுவனம் வழங்கக்கூடிய இழப்பீட்டுத் தொகை யாது?
   1) ரூபா 300 000 2) ரூபா 250 000 3) ரூபா 225 000
   4) ரூபா 200 000 5) ரூபா 150 000

38) ஒரு உற்பத்தியாளன் தனது உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக நுகர்வோர் எதிர்கொள்ளக் கூடிய ஆபத்துக்குச் செய்யக்கூடிய காப்புறுதி எது?
   1) ஆயுள்காப்புறுதி 2) சொந்த விபத்துக்காப்புறுதி
   3) விரிவான காப்புறுதி 4) ஊழியர் நட்டஈட்டுக் காப்புறுதி
   5) பொதுசன பொறுப்புக் காப்புறுதி

39) மொத்த ஏற்றுமதி வருமானத்திற்கும் மொத்த இறக்குமதிச் செலவுக்குமிடையிலான வித்தியாசம் பின்வருவனவற்றுள் எது.
   1) வியாபார நிலுவை 2) நடைமுறைக்கணக்கு நிலுவை
   3) சென்மதி நிலுவை 4) மூலதனக் கணக்கு நிலுவை
   5) சேவைக்கணக்கு நிலுவை

40) இலங்கையின் இறக்குமதிச் செலவீட்டில் மிகப்பெரும் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகை எது?
   1) நுகர்வுப்பொருட்கள் 2) இடைநிலைப்பொருட்கள்
   3) முதலீட்டுப்பொருட்கள் 4) சேவைகள் 5) பகுபடாதவை

B.S.பசில் (ஆசிரியர்)
உடுவில் மகளிர் கல்லூரி

# ஈராக்கில் நிலைகொண்டுள்ள படைகளை மீளப்பெறுவதற்கு ஸ்பெயின் தீர்மானம்!

## அமெரிக்காவுக்கு நெருக்கடி அதிகரிப்பு



(பாக்தாத்)

ஸ்பெயின் அரசாங்கம் ஈராக்கில் பணிபுரியும் தனது படையினரை திருப்பி அழைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுவருகின்றது.

இதனால் ஈராக்கில் பணிபுரியும் சர்வதேச நாடுகள் தமது பாதுகாப்புப் பணிகள் தொடர்பாக மீளாய்வினை மேற்கொள்ளுமாறு அமெரிக்கா கேட்டுள்ளது.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலீசா கரஷ் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் -

சில மாற்றங்களை ஈராக்கில் பணிபுரியும் படைகளிடையே மேற்கொள்வதற்கு அந்நாட்டு படைகள் சார்ந்த நாடுகள் தீர்மானிக்கலாமென குறிப்பிட்டிருந்தார்.

ஸ்பெயினில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் - தமது நாட்டுப் படைகளை ஈராக்கிலிருந்து வெளியேற்ற விரும்புவதாக தெரிவித்த கருத்தின் பின்னரே அமெரிக்கா இவ்வகையான மாற்றங்களைச் செய்யவுள்ளது.

இதேவேளை ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகியான போல் பிறீமர் - ஈராக்கின் பாதுகாப்பிற்கு வெளிநாட்டுப் படைகள் அவசியமானதெனத் கருத்துத் தெரிவித்தார். அதேவேளை அந்நாட்டுப் பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போரிடும் ஆற்றல் ஈராக்கியப் படைகளுக்கில்லை எனவும், இதனால் அதிகாரங்கள் ஈராக்கியர்களிடம் ஒப்படைக்கப்படும் வரை வெளிநாட்டுப் படைகள் அந்நாட்டில் கடமையாற்றவேண்டுமெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக பி.பி.சி செய்தியாளர் ஒருவர் கருத்துத் தெரிக்கையில் -

ஆயிரக்கணக்கான மேலதிக படைகள் ஈராக்கிற்கு தேவைப்படும்வேளையில் ஸ்பெயின் படைகளின் வெளியேற்றம் ஈராக்கின் பாதுகாப்பில் பலத்த மாற்றத்தை ஏற்படுத்தலாமென தெரிவித்தார்.

# சர்வதேச விண்வெளி மையத்திற்கு மூவரை ரஷ்யா அனுப்பியது!

கஸகஸ்தான் ரொக்கட் தளத்திலிருந்து சர்வதேச விண்வெளி மையத்திற்கு மூவரை ரஷ்யா அனுப்பியுள்ளது. ரஷ்யர் ஒருவர், அமெரிக்கர் ஒருவர் மற்றும் நெதர்லாந்தைச் சேர்ந்த ஒருவரென மூவரே அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

2003 ஆம் ஆண்டு கொலம்பிய விண்கலமொன்று விபத்துக்குள்ளானபின்னர் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான பயணங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. தற்போது விண்வெளி நிலையத்திற்கான பயண ஒழுங்குகளை ரஷ்ய விண்வெளி நிலையமே மேற்கொண்டுவருகின்றது. அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் விண்வெளித் திட்டங்களைக் குறைத்துள்ளன.

இதேவேளை மிகுந்த நிதிநெருக்கடி காரணமாக இந்தப் பயணத் திட்டங்களைத் தொடரமுடியாத நிலையும் காணப்படுகின்றது. இதனால் செல்வந்தர்களுக்கு இடமளிப்பதன்மூலம் விண்வெளித் திட்டங்களுக்கான நிதியை ரஷ்யா திரட்டிவருகின்றது.

அமெரிக்காவின் விண்வெளி அமைப்பான நாஸா - ரஷ்யாவின் விண்வெளித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு மறுத்துள்ளது. அத்துடன் பொருட்களையோ அல்லது மனிதர்களையோ விண்வெளி நிலையத்திற்கு அனுப்பும் திட்டத்தையும் அவை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதன் விளைவாக ஆறு மாதத்திற்கு ஒரு முறை விண்வெளிக்கு உல்லாசப் பயணிகளை அனுப்பும் திட்டத்தை ரஷ்யா வருடத்திற்கொரு முறையாக மாற்றிக்கொண்டது.

இதனிடையே 'சோயுஷ் ரி எம் ஏ 4 எனப்படும் கலம், விண்வெளி



நிலையத்தை அடைவதற்கு இரண்டு நாட்கள் தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த விண்வெளி நிலையத்தில் தற்போது அமெரிக்க வீரர் மைக்கல் போலியும், ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்ஸான்டர் கலினும் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்திலிருந்து வலம் வந்துகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு

### சிறுவர்களை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தியவருக்கு எதிராக பெல்ஜியம் நீதிமன்றில் விசாரணை



சிறுவர்களைக் கடத்தி பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியபின் அவர்களைக் கொலை செய்த மார்க் டுரொக்ஷிற்றுக்கு எதிராக பெல்ஜியம் நீதிமன்றில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இதன்போது 1996 ஆம் ஆண்டு 12 வயதாகவிருந்த சபீனி டார் டெனி என்ற சிறுமி கடத்தப்பட்டு 80 `நாட்கள்வரை வீடொன்றிலுள்ள நிலத்தின்கீழ் அறையில் தடுத்து வைககப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக மார்க்மீது நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மார்க் இவ்வாறு கடத்தி பாலியல் வல்லுறவுக்குப்பின் தடுத்துவைத்திருந்த நான்கு சிறுமிகளையும் கொலைசெய்துள்ளார்.


எல்லாப் பெண்களையும் கொலைசெய்தது போன்று தன்னை ஏன் கொலைசெய்யவில்லை என குற்றவாளியான மார்க்கை கேள்வியொன்றில் சபீனி கேட்டிருந்தார். கொலைசெய்யும் எண்ணம் தனக்கு ஏற்படவில்லை என மார்க் அப்போது கருத்துத் தெரிவித்திருந்தார்.

மேலும் சபீனி ஒருமுறை மார்க்கிடமிருந்து தான் தப்பித்துக்கொள்ள முயற்சித்தவேளை சிக்கிக்கொண்டதாகவும், பின் அவ்வாறு முயற்சிகள் மேற்கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார்.

1996 ஆம் ஆண்டு கோடைகாலத்தில் சபீனி விடுவிக்கப்பட்டிருந்தார். அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் குடும்பத்தினருக்கு எழுதிய கடிதங்களில் சில, நீதிமன்றில் வாசிக்கப்பட்டன. இவை உரிய இடத்தில் சேரவில்லை. இக்கடிதங்களில் இவர் அனுபவித்த கொடுமைகள் விபரிக்கப்பட்டிருந்தன. இவ் விசாரணையில் 400 இற்கு மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கவுள்ளன.

# தென்னாபிரிக்க ஜனாதிபதி தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளதாம்!

## இங்காதா கட்சி குற்றச்சாட்டு



தென்னாபிரிக்காவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பலமுறைகேடுகள் நடந்துள்ளதாகவும், இதனால் தாம் தென்னாபிரிக்க உயர்நீதி மன்றில் முறையீடு செய்யவுள்ளதாகவும் தென்னாபிரிக்க இன்காதா சுதந்திரக்கட்சி தெரிவித்தது.

இது தொடர்பாக இக்கட்சியின் தலைவர் மங்கொசுது கருத்துத் தெரிவிக்கையில் -

தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக 40 முறைப்பாடுகளை தென்னாபிரிக்காவின் சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவிடம் தெரிவித்ததாக கூறினார்.

ஆனால், தேர்தல் ஆணையகம் தென்னாபிரிக்காவில் தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடந்ததாக அறிவித்துள்ளதாகவும் மங்கொசுது தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவில் நடந்த தேர்தலில் தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் 70 வீத வாக்குகளையும், இங்காதா சுதந்திரக்கட்சி 7 வீத வாக்குகளையுமே பெற்றுக்கொண்டது.

இதேவேளை தென்னாபிரிக்காவின் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான ஜனாதிபதியாக தற்போதைய ஜனாதிபதி தபோ மெபிகி எதிர்வரும் 27 ஆம் திகதி பதவியேற்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வடகொரிய ஜனாதிபதி கிம் சீனாவிற்கு இரகசிய விஜயம்

## தென்கொரியப் பத்திரிகை கூறுகிறது

(பீஜிங்)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் இல்-சீன ஜனாதிபதி கு ஜின்ரோவை நேற்று சீனத் தலைநகரான பீஜிங்கில் இரகசியமாகச் சந்தித்துக் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தென்கொரிய ஊடகங்கள் தகவல் வெளியிடுகையில் -

விசேட ரயில் வண்டி மூலம் வடகொரிய தலைவர் கிம்மும், அவரது குழுவினரும் நேற்று சீனத் தலைநகருக்குச் சென்றதாகத் தெரிவித்துள்ளன.

இதேவேளை இவரது சீன விஜயம் தொடர்பாக வடகொரிய அதிகாரிகளோ அல்லது சீனாவின் பத்திரிகைகளோ உறுதிப்படுத்தவில்லை.

இவரது விஜயம் தொடர்பாக தென்கொரியப் பத்திரிகைகள் மட்டுமே செய்திகள் வெளியிட்டுள்ளன.

கிம்மின் சீனாவிற்கான விஜயம் உறுதிப்படுத்தப்படுமானால் - வடகொரியத் தலைவர் ஒருவர் 2001 ஆம் ஆண்டு மேமாதத்திற்கு பின்னர் முதலாவதாக சீனாவிற்குச் செல்பவராக இருப்பார்.

இதேவேளை சீனாவின் தலைநகரான பீஜிங்கிற்கு வடகொரியாவிலிருந்து ரயில் வண்டியொன்று சென்றதாக பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

சீனா சென்றுள்ள கிம் அந்நாட்டுத் தலைவருடன் வடகொரியாவின் அணுசக்தி மற்றும் பொருளாதாரத் திட்டங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தென்கொரியாவின் ஜோன்கப் செய்திநிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சீனாவின் முன்னாள் பிரதமர் ஸியாங் ஸெமின் மற்றும் பிரதமர் வென்ஸியாபயோ ஆகியோரையும் கிம் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

வடகொரி அணு அமைப்பு தொடர்பில் நடக்கும் பேச்சுவார்த்தைகளில் சீனா பிரதான அனுசரணையாளர் பங்கினை வகிக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.



# தமிழ்நாட்டில் நேற்று வேட்புமனுத்தாக்கல்!

(சென்னை)

தி.மு.க, பா.ஜ.க, ம.தி.மு.க, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்கள் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தன.

சிவகங்கை தொகுதியில் காங்கிரசின் கை சின்னத்தின் கீழ் ப.சிதம்பரம் போட்டியிடுகிறார். சிவகங்கையில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரும், தேர்தல் அதிகாரியுமான ராதா கிருஷணனிடம் தனது வேட்புமனுவை நேற்று அவர் தாக்கல் செய்தார்.

இதேபோல் திருச்சியில் ம.தி.மு.க சார்பில் போட்டியிடும் எல்.கணேசன், திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மணிவாசகனிடம் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். முன்னாள் தி.மு.க அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி மேயர் சாருபாலா தொண்டைமான் உள்ளிட்டோர் அப்போது உடன் இருந்தனர்.

திருச்செங்கோடு தொகுதியில் போட்டியிடும் தி.மு.க வேட்பாளர் சுப்புலட்சுமி ஜெகதீசன், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜேந்திரனிடம் வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

கோபிச்செட்டிப்பாளையம் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் பாலச்சந்திரனிடம் வேட்புமனுவை வழங்கினார்.

பெரம்பலூரில் தி.மு.க வேட்பாளர் ராஜாவும், சிவகாசி தொகுதியில் ம.தி.மு.க வேட்பாளர் சிப்பிப்பாறை ரவிச்சந்திரனும் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மகாவலி அமைச்சை ஜே.வி.பிக்கு ஜனாதிபதி சந்திரிகா வழங்கக்கூடாது!

## சுதந்திரக் கட்சியினர் வற்புறுத்து

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தி அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா தனது அதிகாரத்தின் கீழேயே வைத்திருக்க வேண்டுமெனவும் அதனை எக்காரணம்கொண்டும் ஜே.வி.பிக்கு வழங்கக் கூடாதெனவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதியைக் கோரியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மகாவலி அபிவிருத்தி அமைச்சு சிக்கலைத் தீர்ப்பதற்காக அதனை வேறொரு அமைச்சாக்கி ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டுமென நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மகாவலி அபிவிருத்தி அமைச்சை ஜனாதிபதி தன்வசம் வைத்துக்கொண்டு ஜே.வி.பியினருக்கு சில மாற்று யோசனைகளை சமர்ப்பிக்கத் தயாராகவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை கண்டியில் சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் ஜனாதிபதிக்கும் - ஜே.வி.பியினருக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் எவ்வித இணக்கப்பாடும் ஏற்படவில்லை.

இதில் மகாவலி அபிவிருத்தி அமைச்சை ஜே.வி.பியினருக்கு வழங்க ஜனாதிபதி தயாரில்லையெனவும், ஆனால் - தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனத்தை வழங்கத் தயாரெனவும் ஜனாதிபதி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், மகாவலி அபிவிருத்தி அமைச்சை, நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சுக்கு வழங்கவும் ஜனாதிபதி எண்ணியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மகாவலி அபிவிருத்தி அமைச்சை வழங்காத காரணத்தினாலேயே ஜே.வி.பி இதுவரை அமைச்சுப் பதவிகளை ஏற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - நாளைமறுதினம் நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் புதிய மாற்றுயோசனைகளை முன்வைத்து இருதரப்பும் கலந்துரையாடி இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணப்படுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# சபாநாயகர் தெரிவில் ஹெல உறுமய நடுநிலைமை

(கொழும்பு)

நாடாளுமன்ற சபாநாயகர் பதவிக்கு தெரிவுசெய்வதற்காக நடாத்தப்படும் வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமயவின் அரசியல் உயர்பீடம் தீர்மானித்துள்ளது.

நேற்று ஜாதிகஹெல ஊறுமயவின் அரசியல் உயர்பீடம் கொழும்பில் கூடியவேளை இந்த முடிவை எடுத்துள்ளதாக அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது, செயற்படவேண்டிய முறைகள், சபாநாயகர் தெரிவில் கலந்துகொள்வதா என்பது குறித்து ஆராயப்பட்டது.

இதன்போதே சபாநாயகர் தெரிவில் தாம் நடுநிலையுடன் செயற்படுவது என்று முடிவுசெய்தனர்.

அத்துடன், ஜே.வி.பியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து சபாநாயகர் பதவியை வழங்க முன்வந்தால் அதுபற்றி பரிசீலிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. (01)

## கருணா விவகாரத்தை

# தவறாக ஜனாதிபதி கையாண்டதாலே நாட்டில் அரசியல் இழுபறி ஏற்பட்டது!

## ஐ.தே.க.எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்ட கருணாவுக்கும், அமைந்த அமைப்பின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையை ஜனாதிபதி தேவையற்ற விதத்தில் கையாண்டமையால் நாட்டில் அரசியல் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ விஜயரட்ண தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜே.வி.பியுடன் இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைக்கும்போது, ஜனாதிபதி விடுதலைப் புலிகளிடம் இருந்து விலகிய கருணாவை தனக்குச் சாதகமாக பயன்படுத்த முயற்சித்தார்.

கருணாவை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி தலையிட திட்டமிட்டிருந்தார்.

இந்தவிவகாரம் தற்போது, பாரிய அரசியல் முறுகல் நிலைக்கு வித்திட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

## உயர்தரப் பரீட்சைக்கு

# தேசிய அடையாள அட்டைகள் அவசியம் பயன்படுத்தவேண்டும்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் ஆட்பதிவுத் திணைகளத்துடன் தொடர்புகொள்ளுமாறு ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால், தேசிய அடையாள அட்டை இல்லாத மாணவர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் ஆட்பதிவுத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு திணைக்களம் அறிவித்துள்ளது. (01)

# அமெரிக்க நாசகாரி...

குஷிங்கின் நினைவான யு.எஸ்.எஸ் குஷிங் எனப் பெயரிடப்பட்டது.

ஜப்பானின் யொகொஅகா துறைமுகத்தை பிரதான கட்டளைத் தளமாககொண்டு இயங்கும் இந்த நாசகாரியில் இரண்டு எஸ்.எச்.சீ ஹொக் ரக ஹெலிகள் தரித்திருக்கின்றன.

அதிநவீன ஏவுகணைகளை செலுத்தக்கூடிய இந்த நாசகாரியில் தரையிலிருந்து வானுக்கு செலுத்தப்படும் ஏவுகணைகள் ரொமஹோக் என்ற தரைத் தாக்குதல் ஏவுகணைகள் மற்றும் கடற்படைக் கப்பல்களை அழிக்கும் ஹர்பூர் ஏவுகணைகள் உள்ளிட்ட அதிநவீன ஆயுதங்கள் பலவும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

கடற்போர் மற்றும் தாக்குதல் போர் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் இந்த நாசகாரி போர்க்கப்பலின் கட்டளை அதிகாரியாக கொமாண்டர் ஸ்ரீவன் ஏ மக்லோவ் பணிபுரிகின்றார்.

கொழும்பு துறைமுகத்தில் இந்த போர்க்கப்பல் தரித்திருக்கும் போது இக்கப்பலின் கட்டளை அதிகாரியான கொமாண்டர் ஸ்ரீவன் மக்லோவ் இலங்கை கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவதுடன் தமது அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அன்னை பூபதி...

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.க.ஈழவேந்தன், பத்மினி சிதரம்பரநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

யாழ்.கல்வித் திணைக்களம், யாழ்.மாநகரசபை, வணிகர் சங்கம், கூட்டுறவுச் சங்கம், தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி, பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் முதலானோர் கலந்துகொண்டனர்.

அங்கு கவிஞர் பூபதி புலேந்திரராஜா தலைமையிலான கவியரங்கொன்றும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, தியாகதீபம் அன்னை பூபதியின் 16 ஆவது ஆண்டு நினைவுதினம் மட்டக்களப்பு நாவலடியில் உள்ள அவரது நினைவாலயத்தில் நேற்றுமாலை பெரும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அன்னையர் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த நினைவு நிகழ்வு இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் சேனாதி தலைமையில் நேற்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் தளபதி ரமணன் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் ரெலோ இயக்கத்தின் பிரசாரச் செயலர் பிரசன்னா இந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு கலந்துகொண்ட தளபதி ரமணன் உரையாற்றுகையில் -

தேசியத்தலைவர் நிதானத்துடனும், பொறுமையுடனும் வகுத்த வியூகம் காரணமாகவே இரத்தம் சிந்தாமல் இந்த இரு மாவட்டங்களிலும் அண்மையில் உருவான நெருக்கடி நிலை தீர்க்கப்பட்டது.

தமிழ்த்தேசியத்தை எந்தவொரு சக்தியாலும் உடைக்கமுடியாதென்பதை இந்த மாவட்ட மக்கள் மீளவும் நிரூபித்துள்ளார்கள் எனவும் தெரிவிததார். (ப,205)

## தட்டிவான்...

காலை 10.30 இற்கு இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் கொடிகாமத்திலிருந்து இமையாணன் பகுதியிலுள்ள தனது வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த சன்னதி ரவிக்குமார் (வயது 24) என்னும் இளைஞர் உயிரிழந்தார்.

இதேவேளை, சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதனிடையே, மேற்படி பகுதிகளில் சேவையிலீடுபடும் தட்டிவான்களில் அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிவருவதாக சாவகச்சேரி நீதிவான் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (202)

## யுத்தத்தால்...

அவசர மனிதாபிமான தேவைகளைக் கூட எங்களால் பூர்த்தி செய்ய முடியாமல் போய்விட்டது. ஒரு சமாதான முன்னெடுப்புகளுக்கு ஒரு பின்னடைவாகவே நாங்கள் இதைப் பார்க்கின்றோம்.

இந்த சமாதான காலத்திற்குள் எமது பலத்தை சகல வழிகளிலும் எங்களுடைய போராட்ட பலத்தின் ஊடாக இதுவரை காலமும் இலங்கை அரசாங்கம் நம்பியிருந்த யுத்தம் மூலமாக தமிழ் மக்களுடைய பிரச்சனையை அடக்குவதாகவோ அல்லது அழிப்பதாகவோ நினைத்தவர்களுக்கு நாங்கள் ஒரு முற்றுப்புள்ளி வைத்து தமிழ் மக்களோடும், தமிழீழ தேசத்தோடும் பேசி ஒரு இணக்கப்பாடான தீர்வுக்கு வருவதைத் தவிர வேறு மார்க்கமாக இப்பிரச்சனையை தீர்க்கமுடியாது என எமது தேசியத் தலைவர் அவர்கள் நிறுவிக்காட்டியுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிங்கள தேசமும்...

சிங்கள தேசமும், சர்வதேசமும் இனிமேல் மனதில் நிறுத்திக்கொண்டு நமது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளும் என நம்பலாம்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வுகாணும் உறுதிப்பாட்டோடு புலிகள் இயக்கம் உள்ளது.

இந்த நோக்கத்துடன் முன்னைய அரசோடு ஒரு தொடர் பேச்சுவார்த்தையை புலிகள் இயக்கம் சுமூகமாக நடாத்திவந்தது.

சிங்கள அரசுடன் எட்டப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டையும் புலிகள் இயக்கம் சரியாக கடைப்பிடித்து வருகிறது. எனினும் தமிழ் மக்களைப் போல் சிங்களவரின் வாக்குத்தீர்ப்பு சமாதானத்திற்கான தெளிவான மக்கள் ஆணையாக இருக்கவில்லை. குழப்பகரமான தலைமையையும் ஆட்சியில் அமர்த்தியுள்ளனர்.

ரணிலின் கட்சியினர் தமிழர் பகுதியின் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு ஒரு உறுதியான சமாதானத்திற்கு ஆணை கேட்டிருந்தனர். சிங்கள வாக்காளர் ரணிலை ஆட்சீப் பீடமேற்ற மறுத்துவிட்டனர்.

ஆனால், சந்திரிகா-ஜே.வி.பி கூட்டணியினர் சிங்கள மேலாதிக்கத்துடன் கூடிய ஒரு சமாதானப் பேச்சிற்கான கொள்கையை முன்வைத்தனர். சிங்கள வாக்காளர் அதற்கே ஆணை வழங்கினர். தென்னிலங்கையில் தமிழர்கள் கணிசமாக வாழ்ந்துவரும் தேர்தல் மாவட்டங்களில் ரணிலின் கட்சியினர் வெற்றிவாகை சூடியுள்ளனர். தனிச்சிங்கள தேர்தல் மாவட்டங்களில் தோற்றுள்ளனர்.

ரணிலின் சமாதான முயற்சிகளிற்கு தமிழரின் ஆதரவும். சிங்களவரின் எதிர்ப்பும் உள்ளதை இந்தத் தேர்தல் முடிவு காட்டுகின்றது.

நீண்ட போரும் அதுகொடுத்த அரசியல் விழிப்புணர்வும் சிங்கள மக்கள் மத்தியில் பாரிய மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்ற பொதுவான அபிப்பிராயத்தை இந்தத் தேர்தல் முடிவு பொய்யாக்கியுள்ளது.

சிங்கள மக்களது இந்த இனவாத மனநிலை சர்வதேச சமூகததை ஆச்சரியப்படுத்தியிருக்கும் ஆனால, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இது பரீச்சயமானதொன்றாகும்.

சிங்களத்தில் ஆட்சி அமைத்துள்ள புதிய கூட்டணியின் வெற்றி தமிழினத்திற்கு ஒரு சவாலாகவே விளங்கப்போகின்றது. புதிய கூட்டணி அரசு விரும்பும் சமாதானப் பேச்சுக்களின் திட்டங்கள் புலிகள் இயக்கத்தின் அரசியல் நிலைப்பாட்டிற்கு முரணாகவேயுள்ளது.

புலிகள் இயக்கத்தின் சமாதான அரசியல் வெளிப்படையாகவும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் உள்ளது.

தேர்தலில் கிடைத்த மக்கள் ஆணையும் புலிகளின் அரசியல் பலத்தை அதிகப்படுத்தியுள்ளது. சிங்களவரின் இனவாத ஆசைகள் இராணுவ ரீதியாகவும் சரி அரசியல் ரீதியாகவும் சரி நிறைவேற்றப்பட முடியாத அளவுக்கு புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பலமாக உள்ளது என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அலரி மாளிகை...

கொமாண்டோ பாதுகாப்பினைக் கோரிப் பெற்றிருந்தனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், உல்லாச பயணத்துறை அமைச்சர் அனுர பண்டாரநாயக்க உட்பட சில அரசியல்வாதிகளுக்கு விசேட அதிரடிப் படைப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை - முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு வழங்கும் பிரிவின் பாதுகாப்பு ஒழுங்குமுறைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 13 - 06 - 1933 | 21 - 03 - 2004 |



## அமரர் திருமதி தம்பிஐயா பூபதி

துர்க்காபுரம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், பழனிமுருகன் கோவில்வீதி, கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்ட அமரர் திருமதி தம்பிஐயா பூபதி அவர்கள் 21.03.2004 யாழ்ப்பாணத்தில் இறையடி சேர்ந்த செய்திகேட்டு - உடன் வந்து உதவியவர்கள், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்கள், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில்கொண்ட எங்கள் அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 20.04.2004 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(720)

*பழனிமுருகன் கோவில்வீதி,*
*இருபாலை றோட்,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*

அன்னாரது பிரிவால் துயருறும்
த.விமலதாசன் (ராசப்பா)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.